








இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524







29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1542 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 24, 2025










# கனடாவில் தலைமையகத்தைக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் இயக்கத்தின் "52வது எழுச்சி மாநாடும்" "செந்தமிழ் கலை மாலை" பண்பாட்டு விழாவும்

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டும் உலகில் சுமார் இருபது நாடுகளில் கிளைகளையும் நிறுவியும் வெற்றிகரமாக 50 ஆண்டுகளையும் கடந்து செயற்பட்டு வரும் அனைத்துலகத் தமிழர்களின் ஒரே அமைப்பான "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவும் எதிர்வரும் 25-10-2025 அன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் ஜேர்மனி தேசத்தின் நகரில் அமைந்துள்ள **KOPERNIKUS GYMNASIUM AULA** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பெற்றுள்ளது.

மேற்படி இருபெரும் விழாக்களை ஏற்பாடு செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை. கணேசலிங்கம் அவர்களும் அனைத்துலக கிளைகளுக்கு பொறுப்பான ஜேர்மனி வாழ் திரு .ஆர். ராஜசூரியர் ஆகியோரின் தலைமையில் ஏனைய பல முக்கிய உறுப்பினர்கள் கடந்த சில மாதங்களாக தீவிரமாக உழைத்துள்ளார்கள்.

(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில் )

# மொன்றியால் மாநகர் வாழ் "தமிழ்மாமணி" க. உயிரவன் அவர்களின் மணிவிழா 25— 10— 2025 அன்று நடைபெறுகிறது

## பாட்டருவியான அவரைப் பாராட்ட உலகெங்குமிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் நேரிலும் இணையத்திலும் இணையவுள்ளார்கள்

கனடா - மொன்றியால் மாநகரில் கடந்த பல வருடங்களாக வாழ்வது மாத்திரமல்ல தமிழ்ப் பணியும் சமூகப் பணியும் அவசியமானவை என்ற நிலைப்பாட்டோட தொடர்ச்சியாக பயணித்து வரும் பாட்டருவி தமிழ்மாமணி கவிஞர் க. உயிரவன் . அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு 25-10-2025 அன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மொன்றியால் மாநகரில் அவரது நண்பர்களும் குடும்பத்தினரும் எடுக்கும் மணி விழா நடைபெறவுள்ளது.

மேற்படி மணிவிழா நிகழ்விற்கு மொன்றியால் வாழ் வர்த்தகப் பிரமுகரும் சமூகச் செயற்பாட்டாளருமான ஏ. எம். இராஜபோல் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றுள்ளார்.

பன்முக ஆற்றலுள்ள அவரைப் பாராட்டி மகிழ்வதற்காக உலகின் பல நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களின் விருப்பத்தின் பேரில் இடம்பெறும் இவ்விழா சிறப்புற நடைபெற கனடா ரொறன்ரோ மாநகரிலிருந்து "கனடா உதயன்" வெளியீட்டு நிறுவனம் நிறுவனம் மற்றும் "யுகம் வானொலி நிறுவனம் ஆகியவற்றின் அதிபர்கள் தமது குழுவினரோடு இணைந்து வாழ்த்துகின்றார்கள். அவரைப் பாராட்ட விரும்புவோர் 1514 867 1551 என்னும் இலக்கத்தை அழைக்கவும். (தொடர்ச்சி 10ம் பக்கம்)











## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Raiaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24







Hon.
**TIM HODGSON**
Member of Parliament
Markham-Thornhill

Tim.Hodgson@parl.gc.ca
(905) 479-1269
@TimHodgson.MT
@timhodgson.mt
www.timhodgsonMP.ca

POWERED BY?

www.uthayannews.ca UTHAYAN உதயன்

POWERED BY?

**உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும்**
**2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்**
**29th Anniversary Celebratons and Uthayan Cultural Festival-2025**

**DEC. 13th 2025**
சனிக்கிழமை மாலை 6.00 மணி

* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன

ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8







**For Tickets and information: 416 732 1608 or 416 752 1524**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets

Coverall Group Inc.
416-706-8160 OR 416-893-3216

உதயன் கதிரோட்டம்

# தாயகத்திலும் கனடாவிலும் விபத்துகளாலும் கவனயீனமான சிகிச்சைகளினாலும் எம் சமூகம் அநியாயமாகப் பறிகொடுக்கும "விலைமதிக்க முடியாத" உறவுகளின் உயிர்கள்

பல்வேறு காரணங்களினால் எம் தாயக மண்ணை விட்டு மேற்குலக நாடுகளுக்கு எம் உறவுகள் புலம் பெயர்ந்து வந்தாலும் எம் தாயகம் பற்றிய சிந்தனை மற்றும் அபாரமான அக்கறை போன்ற காரணத்தினால் எம் மண்ணிலிருந்து கிடைக்கும் செய்திகள் மற்றும் காணொலிகளின் மீது செலுத்தும் கவனமும் அபாரமானது என்பதை எமது தாயக உறவுகளும் நன்கு தெரிந்தும் அறிந்தவர்களாக அங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

2009ம் ஆண்டு வரை எமது வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தின் போதும். தினமும் கிடைக்கும் செய்திகளில் மனது பதற்றமும் பயமும் கொள்ளும் வகையில் சம்பவங்கள் இடம்பெறுவதை இங்குள்ளவர்கள் அறிநது கொண்டிருந்தார்கள். இழப்புக்களும். அரச பயங்கரவாதத்தின் உச்சமான படுகொலைகளும். காட்டிக் கொடுப்புகளும் ஆயிரக்கணக்கான எம் உறவுகளின் உயிர்களை நாம் காவு கொடுக்க காரணமான சம்பவங்கள் அல்லது தாக்குதல்கள் பற்றி தகவல்கள் கிட்டும் போது நாம் தவித்தபடி எம் நாட்களை கழித்திருக்கின்றோம்.

மேற்குலக நாடுகளில் வாழும் எம் உறவுகள், தாயகத்தில் உள்ளவர்கள் அனுபவிக்கும் துயரங்களைப் போன்று எதிர்கொள்ளாவிட்டாலும் அங்கு எந்த ஊரில் எம்மவர்களின் உயிர்கள் பறிக்கப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் எம் இனம் சார்ந்த இழப்புக்கள் என்ற வகையில் அவைகளுக்காக கண்ணீர் வடித்தபடி தங்கள் வாழ்க்கையை தொடர்ந்தார்கள்.

ஆனால் 2009ம் ஆண்டிற்கு பின்னர். "யுத்தம் ஓய்ந்தது, ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுள்ளன, சமாதானம் நிலவுகின்றது" என்ற செய்திகளும் காணொலிகளும் எம் கண்களையும் செவிகளையும் எட்டுகின்றபோது, ஆறுதலடைந்த புலம் பெயர்ந்தஉறவுகள் தொடர்ந்து வந்த நாட்களில் அரச பயங்கரவாதம் எம் பிரதேசங்களில் தொடர்வதையும்.மக்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரின் தேவைகளுக்காக அபகரிப்படுவதையும். காணிகளின் உரிமையாளர்களான எம்மவர்கள் விரட்டப்பட்டு அகதிகளாக காடுகளில் வாழ்வதையும் சோகத்துடன் அறிந்து அவர்களுக்காக வருந்தினோம். அவ்வாறானவர்களின் வாழ்வாதாரத்திற்காக எமது வெளிநாட்டு உறவுகள் தாரளமாக தமது கைகளை நீட்டினார்கள். வீடற்றவர்களுக்கு சிறிதான இல்லங்களை அமைத்துக் கொடுத்தார்கள்.

இன்னொரு பக்கத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் தலைமையகத்தைக் கொண்டு போராட்டத்தையும் பேச்சுவார்த்தைகளையும் நகர்த்திக் கொண்டிருக்கையில் அமைதியாக இருந்த எமது பாராளுமன்ற பிரதிநிதிகள் 2009 இற்கு பின்னர் தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய அனைத்து இனவாதிகளோடும் சமாதானம் பேசுவதாக "பாசாங்கு செய்து கொண்டும் சன்மானங்களைப் பெற்றுக் கொண்டும் சுகபோக வாழ்க்கையை சுதந்திரமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் நியாயமான முறையில் எம் மக்களுக்காக பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல் எழுப்பிய சில அரசியல் தலைவர்கள் தென்னிலங்கை கொடுங்கோலர்களின் ஏவல்களான இராணுவக் காடையர்களால் கொலை செய்யப்பட்டார்கள். ஆனால் தமிழ் மக்களுக்காக "உழைப்பவர்கள்" போல பாராளுமன்றத்தில் நாட்களைக் களித்த தமிழ் அரசியல்வாதிகளின் "கஜானாக்கள்" நிரம்பிய வண்ணம் இருந்தன. தந்திரசாலிகளாக விளங்கிய சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை வளர்த்துக் கொண்டார்கள்.

நாம் இந்த வாரம் இங்கு பகிர்ந்து கொள்ள முனைந்த விடயங்களிலிருந்து விலகிச் செல்லாமல் இனி வரும் வரிகள் அவை பற்றிய வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகின்றோம்.

2009ம் ஆண்டிற்குப் பின்னர் "அமைதி வரும்" என்று எண்ணியிருந்த எமது மக்களுக்கு போதைப் பொருள் தாராளமாக தமிழர் பிரதேசங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. இதனால் எமது தமிழர் மண்ணில் இளைஞர்கள் பலர் போதைப் பொருளுக்கு அடிமைகளாகிப் போக அங்கு விபத்துக்களும் இறப்புககளும் அதிகரித்தன.

குறிப்பாக, அண்மைக் காலங்களில் எமது தாய் மண்ணில் தினமும பலர் மரணத்தைத் தழுவுகின்றார்கள். பல மரணங்கள் விபத்துக்களாகவும் பல மரணங்கள் கவனயீனமாக வைத்திய சிகிச்சைகளினாலும் சம்பவிக்கின்றன. அதற்கு மேலாக போதைப் பொருள் பாவனைகளால் அவற்றுக்கு அடிமையானவர்களை பணம் கொடுத்து "கொலையாளிகளாக - மாற்றும் வன்மச் செயல்களும் அங்கு அதிகரித்துள்ளன.

எமது பத்திரிகை அலுவலகத்திற்கு தாயக செய்தியாளரகள் அனுப்பி வைக்கும் செய்திகளில் தினமும் விபத்து மரணங்களும், வைத்தியசாலைகளில் சம்பவிக்கும் மரணங்களும் தாக்குதல் சம்பவங்களில் சம்பவிக்கும் மரணங்களும் விபத்துக்களில் அநியாயமாக உயிர் பிரியும் மரணங்களும் அடங்கிய செய்திகள் தினமும் வந்த வண்ணம் உள்ளன.

இவ்வாறான மரணங்களை நாம் அழுதுவிட்டுப் போகின்ற இழப்புக்கள் என்று பார்க்காமல், அவை எம் உறவுகளின் விலைமதிக்க "விலைமதிக்க முடியாத" உறவுகளின் உயிர்கள் என்றே எண்ணி கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்!

மார்க்கம் நகரில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு

Part time continental Cook for breakfast and lunch (Monday to Friday).

Delivery Person and South Indian Cook
wanted immediately for a Restarant in Markham

Call: Chauhan at 416-988-9518

சிகை அலங்கரிக்கும் நிலையத்திற்கு வேலையாள் தேவை

ரொறன்ரோ நகரில் இயங்கிவரும் சிகை அலங்கரிக்கும் நிலையத்திற்கு வேலையாள் ஒருவர் தேவை. அனுபவம் அவசியம் தேவை. உயர்ந்த ஊதியம் வழங்கப்பெறும்.
தொடர்புகளுக்கு: 416 835 6749
என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# குரங்குத் தொல்லையினை கட்டுப்படுத்த துப்பாக்கி வழங்குமாறு சாவகச்சேரி நகரசபை உபதவிசாளர் கிஷோர் கோரிக்கை!



தென்மராட்சியில் குரங்குத் தொல்லையினை கட்டுப்படுத்தும் நோக்கில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நகராட்சி மன்ற உபதவிசாளர் ஞா.கிஷோர், நடைபெற்ற மாதாந்த அமர்வில் முன்வைத்தார்.

உபதவிசாளரினால் கடந்த சபை அமர்வில் முன்வைத்த பிரேரணையின் பிரகாரம் குரங்கு தொல்லையினை கட்டுப்படுத்து நகராட்சி மன்ற நிதி மூலம் இயங்கு நிலையில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு வாயுத் துப்பாக்கிகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இந்த கோரிக்கையை அனைத்து சபை உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டதையடுத்து சபை நிதியில் இருந்து உடனடியாக துப்பாக்கிகள் கொள்வனவு செய்வது என ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# இஷாரா செவ்வந்தியுடன் தொடர்புடைய நால்வர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் கைது!

இஷாரா செவ்வந்தியுடன் தொடர்புடைய நால்வர் இதுவரையில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் உதவி போலீஸ் அத்தியாச்சகர் ஊட்லர் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான கணேமுல்ல சஞ்சீவ, நீதிமன்றத்தில் வைத்து சுட்டுப் படுகொலை சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த இஷாரா செவ்வந்தி அண்மையில் நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையில் கொலை சம்பவம் இடம்பெற்ற பின்னர் இஷாரா செவ்வந்தி தங்கியிருந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த வகையிலேயே யாழ்ப்பாணம் மற்றும் கிளைநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த நால்வர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# கரவெட்டியில் இடம்பெற்ற பனம் விதைகள் நடுகை வேலைத்திட்டம்!




23ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில், புளூஸ் அறக்கட்டளை மற்றும் புளூஸ் விளையாட்டு கழகத்தினரின் நிதி அனுசரணையுடன், கரவெட்டி கிழக்கு ஜே/368 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இடங்களில் பன விதைகள் நாட்டும் நிகழ்வானது ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தலைமையில் ஆரம்பமானது.

இவ் நிகழ்வானது 30 000 பன மரங்களை உருவாக்கும் நோக்குடன், அண்மையில் அமரத்துவம் அடைந்த சமூகசேவையாளர் கணபதிப்பிள்ளை கந்தையா (கப்பூது ஐயா) ஞாபகார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



இவ் பனம் விதை நடுகை நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெயானந்தம் ஜெகோபி, பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் அ.அகஸ்ரின், வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜெ.கலைச் செல்வி, ஜனநாயக போராளிகள் கட்சி உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் வானத்திலிருந்து மழையுடன் சேர்ந்து நிலத்தில் விழுந்த மீன்கள்!





யாழ்ப்பாணத்தில் பொழிந்த மழையுடன் மீன்களும் சேர்ந்து விழுந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

22ம் திகதி புதன்கிழமை அன்று அதிகாலை தொடக்கம் தொடர்ச்சியாக யாழில் மழை பொழிந்தது. இந்த மழையுடன் சேர்ந்து மீன்களும் விழுந்தன. அந்த மீன்களை மக்கள் பிடிப்பதை அவதானிக்க முடிந்தது.

கடந்த காலங்களிலும் இவ்வாறு மழையுடன் மீன்கள் விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றம்!

பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம் வடக்கு மாகாண சபைக்கு இடமாற்றலாகி செல்லும் திரு. சாம்பசிவம் சுதர்சன் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் (21.10.2025) அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான இடமாற்ற விடுவிப்புக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக கடமையாற்றினார். தற்போது வடக்கு மாகாண சபையில் தமது கடமையினை பொறுப்பேற்க்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.





இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையான 20வயதுடைய யுவதி தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழி பகுதியைச் சேர்ந்த யுவதி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். ஐயனார் கோவிலடி, நாவற்குழி பகுதியைச் சேர்ந்த கலியுகவரதன் சுருதி (வயது 20) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், உயிரிழந்த யுவதியும் அவரது காதலனும் போதைக்கு அடிமையானவர்கள் என தெரியவருகிறது. இவர் கடந்த 15ஆம் திகதி தனக்கு தானே தீ வைத்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது தீயை அணைத்த காதலன், அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த யுவதி 20ம் திகதி திங்கட்கிழமை அன்றையதினம் (20) உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். சாட்சிகளை சாவகச்சேரி பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இரத்ததான முகாம்!



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஊடகக் கழகத்தின் ஏற்பாட்டில், லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் 23ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் இரத்ததான முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியசாலையின் இரத்த வங்கிகளில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரத்ததான முகாமில் ஆசிரியர்கள், 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் என அனைவரும் இணைந்து குருதிக் கொடையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் மற்றும் வாள் ஆகியவற்றுடன் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு!

## புலனாய்வாளர் சுதர்சனுக்கு 20 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்குவதற்கு சந்தேகநபர்கள் முயன்றபோதும் இலஞ்சத்தை வாங்காமல் கடமையை செய்ததனால் அவரை பலரும் பாராட்டி வருகின்றனர்!





22ம் திகதி புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் 20 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் ஐஸுடனும், மற்றையவர் ஐஸ் மற்றும் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். 23 மற்றும் 25 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரையும் 23ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, வாள் மற்றும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். ஐஸுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை 25ஆம் திகதிவரை பொலிஸ் தடுப்புகாவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த சந்தேகநபர்களை கைது செய்ய முற்பட்டபோது பொலிஸ் புலனாய்வாளர் சுதர்சனுக்கு 20 இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்குவதற்கு சந்தேகநபர்கள் முயன்றனர். இருப்பினும் குறித்த பொலிஸ் புலனாய்வாளர் அந்த இலஞ்சத்தை வாங்காமல் கடமையை நேர்த்தியாக செய்ததனால் அவரை பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



கனடிய செய்திகள் Canadian News

# கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும், இயக்கத்தின் "52வது எழுச்சி மாநாடும்", "செந்தமிழ் கலை மாலை" பண்பாட்டு விழாவும்

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டும் உலகில் சுமார் இருபது நாடுகளில் கிளைகளையும் நிறுவியும் வெற்றிகரமாக 50 ஆண்டுகளையும் கடந்து செயற்பட்டு வரும் அனைத்துலகத் தமிழர்களின் ஒரே அமைப்பான "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவும் எதிர்வரும் 25-10-2025 அன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் ஜேர்மனி தேசத்தின் நகரில் அமைந்துள்ள KOPERNIKUS GYMNASIUM AULA மண்டபத்தில் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பெற்றுள்ளது.




மேற்படி இருபெரும் விழாக்களை ஏற்பாடு செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை. கணேசலிங்கம் அவர்களும் அனைத்துலக கிளைகளுக்கு பொறுப்பான ஜேர்மனி வாழ் திரு. ஆர். ராஜசூரியர் ஆகியோரின் தலைமையில் ஏனைய பல முக்கிய உறுப்பினர்கள் கடந்த சில மாதங்களாக தீவிரமாக உழைத்துள்ளார்கள்.

எதிர்வரும் 25ம் திகதி நடைபெறவுள்ள மேற்படி மாநாடு மற்றும் பண்பாட்டு விழா தொடர்பாக ஜேர்மனி தேசத்தில் வெளிவரும் ஜேர்மன் மொழி பத்திரிகைகளிலும் செய்திகள் பிரசுரமாகியுள்ளதும் எமது புனிதமான இயக்கதின் மகிமையை பறைசாற்றுகின்றது அல்லவா?

எனவே இவர்கள் அனைவருக்கும் கனடாவில் இயங்கும் தலைமையகத்தின் அகிலத் தலைவர் சிவா. கணபதிப்பிள்ளை அவர்களும் இயக்கத்தின் கனடா கிளையின் தலைவரும் அகிலச் செயற்குழுவின் சர்வதேச ஊடகப் பொறுப்பாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் இணைந்து பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

மேற்படி ஜேர்மனி மாநாடு தொடர்பாக சிவா. கணபதிப்பிள்ளை அவர்களும். ஆர்.என். லோகேந்திரலிங்கமும் மேலும் குறிப்பிடுகையில். "எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை ஜேர்மனி தேசத்தின் றேய்ன் நகரில் நடைபெறவுள்ள எழுச்சி மாநாடும் பண்பாட்டு விழாவும் இக்காலப் பகுதியில் எமது புனிதமான இயக்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் மிகவும் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. காரணம் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பெற்று இத்தனை ஆண்டுகாலம் பக்குவமான முறையில் பல இயக்குனர் சபைகளுக்கு கீழ் இயங்கிவந்த எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தை சீர்குலைக்க சில நாடுகளில் சட்டவிரோதமாகச் செயற்படும் "புல்லுருவிகள்" தங்கள் சுயநலத்திற்காகவும் தவறான வழியில் புகழை ஈட்டி விடலாம் என்ற நப்பாசையிலும் மிகவும் கீழ்த் தரமாக செயற்பட்டு வருகின்றார்கள். கனடாவில் இயங்கிவரும் எமது உத்தியோகபூர்வமான தலைமையகத்திற்கு மாத்திரமே சொந்தமான இயக்கத்தின் இலட்சினையை தவறாகப் பயன்படுத்துகின்றார்கள்.

அத்துடன் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அதிகார துஸ்பிரயோகம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான "பொய்யர்கள்" பலரை எமது புனிதமான இயக்கத்தின் அங்கத்தவர்களாக சட்டவிரோதமாக இணைத்து கூட்டங்களை நடத்தி இயக்கத்தை மாசுபடுத்த முனைகின்றார்கள். அத்துடன் நிதி மோசடிகளிலும் ஈடுபட்டுவருகின்றார்கள் என்ற செய்திகளும் எம்மை வந்தடைந்துள்ளன.

எனவே, இவ்வாறான பல இடையூறுகளும் "ஆபத்துக்களும்" நிறைந்த இந்த காலப்பகுதியில் மேற்படி பொய்யர்களான மோசடிக்குழுக்களின் துஸ்பிரயோகத்திலிருந்து எமது புனிதமான இயக்கத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு. உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் உண்டு என்பதை அழுத்தமாகக் குறிப்பிடுகின்றோம்.

எனவே, எமது கனடா தலைமையகத்தின் கீழ் உலகெங்கும் இயங்கிவரும் கிளைகளையும் தலைமையகத்தையும் மேலும் உறுதியுடன் செயற்பட நாம் அனைவரும் ஒன்று திரள வேண்டும்.



Tamilisches Kulturfest in Kopi-Aula

RHEINE. Die „Internationale Bewegung für Tamilische Kultur – Europäische Union" lädt zur kulturellen Veranstaltung am Samstag, 25. Oktober, um 15 Uhr in die Aula des Kopernikus Gymnasiums Rheine ein. Nach zehn Jahren freut sich der Verein ganz besonders, erneut ein Kulturfest in Rheine veranstalten zu können. Mit diesem Fest möchte der Verein einen Beitrag zum kulturellen Miteinander und zum Dialog zwischen den Kulturen leisten. Das Programm bietet ein vielfältiges Bühnenprogramm mit traditionellen tamilischen Tänzen, Musikdarbietungen und Beiträgen junger Künstlerinnen und Künstler. Als Ehrengast wird Bürgermeister Peter Lüttmann erwartet, dessen Teilnahme die Veranstaltung in besonderer Weise würdigt. Neben Mitgliedern der tamilischen Gemeinschaft sind alle Interessierten – auch über Rheine hinaus – eingeladen, diesen besonderen Nachmittag mit zu erleben. Für das leibliche Wohl ist selbstverständlich gesorgt, der Eintritt ist frei.

* Datum: Samstag, 25. Oktober, Ort: Aula des Kopernikus Gymnasiums Rheine, Beginn: 15 Uhr

Raubfischangeln des SAV Rheine

RHEINE. Das alljährliche Raubfischangeln des Sportfischereivereins Emsland findet am kommenden Sonntag, 26. Oktober, statt. Alle Vereinsmitglieder sind eingeladen. Treffpunkt ist um 7 Uhr am Anglerheim, Kettelerufer 70 in Rheine. Der Verein freut sich auf zahlreiche Teilnehmende und einen spannenden Tag.

இவ்வாறான ஒரு தருணத்தில் எமது இயக்கத்தின் ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவும் சிறந்த முறையில் நேர்த்தியாக கொண்டாடப் பெறவேண்டும் என்று இந்தப் பணியில் தம்மை அர்ப்பணித்து செயற்படும் அனைத்து உறுப்பினர்களும் உலகின் பல பாகங்களிலிருந்தும் கனடாவிலிருந்தும் நிஜமான உறுப்பினர்களும் தொண்டர்களும் கூட்டாக எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


மேலும், 25ம் திகதி சனிக்கிழமையன்று ஜேர்மனியில் நடைபெறவுள்ள இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாட்டிலும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவிலும் முக்கிய விருந்தினர்களாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கதின் பிரித்தானியக் கிளையிலிருந்து முக்கியமான உறுப்பினர்ளும் கலந்து கொள்கின்றார்கள் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தவர்களாக நாம் உள்ளோம். இவ்வாறு பிரித்தானியாவிலிருந்து பிரித்தானியக் கிளையின் தலைவர் அமுது இளஞ்செழியன் அவர்களும், அதிபரும் டாக்டருமான சரவணமுத்து பூலோகநாதன் அவர்களும், கிளையின் செயலாளரான பொன்னம்பலம் வசந்தகுமாரன் அவர்களும், கிளையின் ஆலோசகராக அரும்பணியாற்றும் முருகேசு தங்கராஜா அவர்களும், கிளையின் ஒருங்கிணைப்பாளர் அமிர்தலிங்கம் விமலதாசன் அவர்களும், கிளையின் பொருளாளர் தாமோதரம்பிள்ளை பிரபாதரன் அவர்களும் கலந்து கொள்வதன் மூலம் புனிதமான எமது இயக்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சீராக தொடரவும் சட்டவிரோதச் செயற்பாடுகளில் தமிழ்நாட்டிலும் மலேசியாவிலும் இயங்கும் "குழப்பவாதிகள்" அனைவரும் உலகத் தமிழர்களால் நிராகரிக்கப்பட வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். அவற்றுக்காக நாம் அனைவரும் ஒன்றாக உழைப்போம்.

இவ்வாறு கனடாவிலிருந்து தலைமையகத்தின் அகிலத் தலைவர் சிவா. கணபதிப்பிள்ளை அவர்களும் இயக்கத்தின் கனடா கிளையின் தலைவரும் அகிலச் செயற்குழுவின் சர்வதேச ஊடகப் பொறுப்பாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்.

sivakana16@gmail.com மற்றும் logendralingam2305@yahoo.com ஆகிய மின்னஞ்சல்கள் மூலம் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அதிகாரபூர்வமான தலைமையகம் தொடர்பான மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கனடிய செய்திகள் Canadian News

# எழுத்தாளர் "அகில்" அவர்கள், தமிழக மற்றும் தாயக எழுத்தாளர்களை புலம்பெயர் படைப்பாளிகளோடு இணைக்கும் பணியினை ஆற்றிவருகின்றார்

## “இலக்கியவெளி” சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய பலரும் புகழாரம் சூட்டினர்

“கனடாவில் வாழ்ந்தாலும் தினமும் உலகெங்கும் உள்ள படைப் பாளிகளுடன் உரையாடுவது. அவர்களின் படைப்புக்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பது. அந்த படைப்பாளிகளை இணையவழி கருத்தரங்குகளின் மூலம் உலகெங்கும் உள்ள எழுத்தாளர்களோடு இணைத்துக் கொள்ளல் போன்ற தனது இயல்பான இலக்கியப் பணிகள் மூலம் அகிலேஸ்வரன் சாம்பசிவம் என்னும் எழுத்தாளர். அகில் அவர்கள், தமிழக மற்றும் தாயக எழுத்தாளர்களையும் இலக்கியத் திறனாய்வாளர்களையும் புலம்பெயர் படைப்பாளிகளோடு இணைக்கும் பணியினை இதயசுத்தியுடன் ஆற்றிவருகின்றார்”.

இவ்வாறு கனடாவிலிருந்து வெளிவரும் இலக்கியவெளி சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்கள் பலரும் புகழாரம் சூட்டினர். கடந்த 18-10-2025 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவிற்கு எழுத்தாளர் தங்கராசா சிவபாலு அவர்கள் தலைமை வகித்தார். எழுத்தாளர் ஸ்ரீரஞ்சினி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.










வாழ்த்துரைகளை டாக்டர் லம்போதரன். வைத்தியர் போல் ஜோசப், கலாநிதி செல்வநாயகி ஸ்ரீதாஸ், செ. ஜெயானந்தசோதி. “உதயன்” பிரதம ஆசிரியரும் எழுத்தாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம், கனடா தமிழ்க் கவிஞர்கள் கழகத்தின் தலைவர் க. குமரகுரு, கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் க. ரவீந்திரநாதன், மற்றும் கவிஞர் அகணி சுரேஸ் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். எழுத்தாளர் கனி விமலநாதன் அவர்களின் கவிதா நிகழ்வும் இடம்பெற்றது.

“இலக்கியவெளி” நீலாவணன் சிறப்பிதழை பாவலர் மாவிலி மைந்தன் சண்முகராஜா வெளியிட்டு வைத்து உரையாற்றினார். சஞ்சிகையில் வெளிவந்துள்ள படைப்புக்கள் தொடர்பாக விமர்சன உரைகளை கவிஞர் மா. சித்திவிநாயகம், கலாநிதி மைதிலி தயாநிதி. மற்றும் கலாநிதி பார்வதி கந்தசாமி ஆகியோர் ஆற்றினர் சபையில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் மற்றும் கனடா தமிழ்க் கவிஞர் கழகம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பலரும் ஏனைய கலை இலக்கிய நண்பர்களும் ஆர்வத்தோடு அங்கு கூடியிருந்தார்கள்.

வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த பலரும் சஞ்சிகையின் பிரதிகளை பெற்றுச் சென்றனர். அன்றைய தினம் ஸ்காபுறோ மற்றும் ரொறன்ரோ ஆகிய நகரங்களில் பல தமிழர் விழாக்கள் இடம்பெற்றாலும், “இலக்கியவெளி” நீலாவணன் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவிற்கு மண்டபம் நிரம்பிய ஆர்வலர்கள் கலந்து கொண்டமை அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்தது.




இறுதி எழுத்தாளரும் “இலக்கியவெளி” சஞ்சிகையை தவறாது வெளியிட்டு வருபவருமான அகில் அவர்கள் நன்றியுரையாற்றுகையில் எழுதுவதும் சஞ்சிகைகளை வெளியிடுவதும் பல சவால்கள் நிறைந்த பணிகளாகத் தோன்றினாலும் சக எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்கள் ஆகியோர் அளிக்கின்ற ஆதரவும் அவர்கள் காட்டும் ஆர்வமும் என்னைப் போன்றவர்களை தொடர்ச்சியாக இவ்வாறான பணிகளில் ஈடுபடச் செய்கின்றன என்றார்.


# Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# புதிய யாப்பா? அல்லது மாகாண சபைத் தேர்தலா?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

அரசாங்கம் தென்னிலங்கையில் தனது வாக்கு வங்கியைப் பாதுகாக்கும் வேலைகளைக் கச்சிதமாகச் செய்து வருகிறது. போதைப் பொருளுக்கு எதிரான யுத்தமும் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கு எதிரான யுத்தமும் வெகுஜனக் கவர்ச்சிமிக்க விறுவிறுப்பான சாகசப் படங்கள்போல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒருபுறம் போதைப்பொருள் கிடங்குகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. போதைப்பொருள் வலைப்பின்னலோடு தொடர்புடையவர்கள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இதைத்தான் முன்பு இருந்த அரசாங்கம் “ஒபரேஷன் யுக்திய” என்று பெயரிட்டு போதைப் பொருள் குற்றவாளிகளை வேட்டையாடியது. பிலிப்பைன்ஸ் அரசாங்கம் அங்கு போதைப்பொருள் வலைப்பின்னலை முடக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளைப் போல யுக்திய நடவடிக்கையிலும் என்கவுண்டர்கள் இடம்பெற்றதாக மனித உரிமை அமைப்புக்கள் விமர்சித்தன.

ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகம் உயிர்ச்சேதம் இன்றி போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. ஒருவிதத்தில் இது யுக்திய நடவடிக்கையின் கனிகளைத் தனதாக்கும் தந்திரந்தான். கடந்த பல வாரங்களாக அடிக்கடி போதைப் பொருள் கிடங்குகள் முற்றுகையிடப்படும் காட்சிகளும் பெருந்தொகையான போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்படும் காட்சிகளும் தொடர்ச்சியாக ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அப்படித்தான் பாதாள உலகக் கும்பல்களுக்கு எதிரான நடவடிக்கையும் நாடகத் தனமாக, சாகசங்கள் நிறைந்த வீரச் செயலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தப்பிச்சென்ற பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் ஒளிந்திருக்கும் நாடுகளில் கைது செய்யப்படுகிறார்கள். அவ்வாறு நாடு கடந்து பாதாள உலகக் கும்பல்களைக் கைது செய்து நாட்டுக்கு அழைத்து வரும் காட்சிகள் சினிமாப் படம்போல ஊடகங்களில் காட்டப்படுகின்றன. அரசாங்கம் தொடர்ச்சியாகப் பாதாள உலகக் கும்பல்களின் கழுத்தை இறுக்கிப் பிடித்து வருகிறது.

இந்த நடவடிக்கைகள் யாவும் டிஜிட்டல் புரோமோஷன் ஊடாக அவை மக்களை வந்தடைகின்றன. அதன் மூலம் போதைப் பொருட்களைக் கைப்பற்றுவதும் பாதாள உலகக் கோஷ்டிகளைக் கைது செய்வதும் வெளிநாடுகளில் அவர்களைக் கைது செய்வதும் அவர்களை நாட்டுக்குள் அழைத்து வரும் காட்சிகளும் கவர்ச்சி மிக்க காணொளிகளாக தொடர்ச்சியாகக் காட்டப்படுகின்றன. இந்த விடயத்தில் அரசாங்கத்தின் டிஜிட்டல் புரோமோஷன் அணியானது இலத்திரனியல் பிரச்சாரத்தை பலமாக முன்னெடுத்து வருகிறது.

மேற்படி டிஜிட்டல் புரோமோஷனில் மற்றொரு நுட்பமான பகுதியும் உண்டு. அது என்னவென்றால் குற்றவாளிகளுக்கு எதிராக துணிச்சலான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற, குறிப்பாக குற்றக் குழுக்களால் விலைக்கு வாங்கப்பட முடியாதவர்கள் என்று கருதப்படுகின்ற காவல்துறை அதிகாரிகள் இந்த டிஜிட்டல் பிரச்சாரக் களத்தில் கதாநாயகர்களாகக் கட்டி எழுப்பப்படுகின்றார்கள். இது நேர்மையான, துணிச்சலான போலீஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு புறம் பிரபல்யத்தைக் கொடுக்கின்றது. இன்னொருபுறம் அவர்களை முன்னுதாரணங்களாக மாற்றும் பொழுது அவர்களைப்போல தாங்களும் தொழிலில் சுத்தமாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும் என்று கருதும் போலீஸ் உத்தியோகத்தர்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுக்கின்றது.

இந்த நடவடிக்கைகளில் தேசிய மக்கள் சக்தியின் செயல் திறன் என்பது வழமையான பாரம்பரியமான கட்சிகள் நடந்து கொள்வதைப் போன்றது அல்ல. மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருக்கும் ஜேவிபி முதலாவதாகவும் முக்கியமாகவும் ஒரு கட்சி அல்ல. ஒரு அரசியல் இயக்கம். எனவே அதற்கு ஓர் அரசியல் இயக்கத்தைப் போன்று அடிமட்ட மக்கள் மத்தியில் பலமான வலைக் கட்டமைப்பு உண்டு. அதுபோலவே அதன் செயற்பாடுகளிலும் ஒரு அரசியல் இயக்கத்துக்குரிய விரைவும் தேர்ச்சியும் இருக்கும். எனவே பாதாள உலக வலைப் பின்னாலையும் போதைப் பொருள் வலைப் பின்னலையும் மணந்து பிடிக்க உதவும் அடிமட்டக் கட்டமைப்பு ஜேவியிடம் உண்டு. இதனால், போதைப் பொருள் வலைப் பின்னல், பாதாள உலக வலைப் பின்னல் என்பவற்றை முடக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் சாகசத் தனமாக முன்னேறி வருகிறது. இது எதிர்க்கட்சிகளை மறைமுகமாக முடக்கக் கூடியது.

எவ்வாறெனில், இலங்கைத் தீவின் கடந்த சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலான அரசியல் என்பது அதாவது இனப்பிரச்சினையின் அரசியல் என்பது தீவின் ஒட்டுமொத்த அரசியலையும் குற்றப் பண்புடையதாக மாற்றியிருக்கிறது. விளைவாக தென்னிலங்கையில் உள்ள ஒருபகுதி அரசியல் பிரமுகர்களுக்கு பாதாள உலகத்தில் நிழல் உண்டு. அதாவது பாதாளக் குழுக்களோடு அவர்கள் ஏதோ ஒருவிதத்தில் உறவுகளைப் பேணி வந்திருக்கின்றார்கள். இதனால் தென்னிலங்கையில் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளின் நிழலாக பாதாள உலகத் தலைவர்கள் காணப்படுகிறார்கள். அரசாங்கம் இப்பொழுது அந்த நிழல்களைக் கண்டுபிடித்து நசுக்கத் தொடங்கிவிட்டது. நிழலை நசுக்கும் பொழுது நிஜத்துக்கு அச்சம் ஏற்படும். அரசாங்கம் தன்னை நெருங்கிவிடும் என்று குற்றப்பின்னணி கொண்ட எல்லா அரசியல்வாதிகளும் பயப்படும் ஒரு நிலைமை தோன்றும்.

அண்மையில் நாமல் ராஜபக்ச “எந்தவித குற்றங்களோடும் தொடர்பில்லாதவர்களுக்கு மட்டுமே எமது பொதுஜன பெரமுனவில் எதிர் வரும் தேர்தல்களில் வேட்பு மனு வழங்கப்படும்” என்று தெரிவித்திருப்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது குற்றப் பின்னணியை உடையவர்களை நாங்கள் கட்சிக்குள் வைத்திருக்க மாட்டோம் என்று ராஜபக்சக்கள் வெளிப்படையாகக் கூறவேண்டிய ஒரு நிர்பந்தத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. இது அவர்களுடைய ஊழலுக்கு எதிரான அரசியலில் குற்றப் பின்னணி கொண்ட அரசியலுக்கு எதிரான அரசியலில் கிடைத்த ஒரு வெற்றிதான். இதுபோன்ற நடவடிக்கைகள்மூலம் அவர்கள் நாடாளுமன்றத்தில் தங்களுக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தொடர்ந்தும் தக்கவைக்க முயற்சிக்கிறார்கள்.

ஆனால் மேற்கண்ட கைது நடவடிக்கைகள் எவையும் போர்க் குற்றம் சம்பந்தப்பட்டவை அல்ல என்பதை தமிழ் மக்கள் உற்றுக் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள். தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு ஆதரவு வளர்ந்திருக்கிறதா இல்லையா என்பதை மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தினால் கண்டுபிடித்து விடலாம். ஆனால் மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு நடக்குமா?

கடந்த சில மாதங்களாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் காணப்படும் ஈபிஆர்எல்எப் கட்சியானது 13ஆவது திருத்தத்தைக் குறித்தும் மாகாண சபைகளை ஆதரித்தும் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இக்கருத்தரங்குகளின் பின்னணியில் வரதராஜப்பெருமாள் இருக்கிறார் என்ற ஊகம் இருந்தது. ஏனென்றால் வரதராஜப்பெருமாள் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் காணப்படும் கட்சித் தலைவர்களை ஏற்கனவே சந்தித்திருக்கிறார். ஆனால் கடந்த வாரம் அவர் வெளிப்படையாக பகிரங்கமாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களோடு காணப்பட்டார். மாகாண சபைத் தேர்தல்களைக் கூடிய அளவு விரைவில் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது அவர்களுடைய நோக்கமாகத் தெரிகிறது.

இது அவர்களுடைய நோக்கமா? அல்லது இந்தியாவின் நோக்கமா? என்ற சந்தேகம் உண்டு. ஏனென்றால் இந்தியா மாகாண சபைகளை தன்னுடைய அடைவாகப் பார்க்கின்றது. இந்திய இலங்கை உடன்படிக்கையின் விளைவு தான் மாகாண சபைகள். எனவே இனப்பிரச்சினைக்கு தான் தீர்வாக முன்வைத்த மாகாண சபைகளை தொடர்ந்து இயங்கு நிலையில் வைத்திருக்க இந்தியா விரும்பும். அண்மையில் ஐநா கூட்டத்தொடரில் மாகாண சபை தேர்தல்களை வலியுறுத்தியும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றக் கோரியும் இந்தியப் பிரதிநிதி பேசியிருந்ததை இங்கு சுட்டிக்காட்டலாம். ஐநாவின் அண்மைய தீர்மானத்திலும் அது இணைக்கப்பட்டிருந்தது. இந்த அடிப்படையில் பார்த்தால் இந்தியா மாகாண சபைத் தேர்தல்களை வேகமாக நடத்த வேண்டும் என்று கருதுவதாக எடுத்துக் கொள்ளலாமா?

ஏனென்றால் அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்குமாக இருந்தால் அந்த யாப்புக்குள் மாகாண சபைகள் இருக்காது என்பது மட்டும் தெரிகிறது. அண்மையில் சுவிற்சலாந்தில் நடந்த ஒரு சந்திப்பின் போது அரச பிரதிநிதி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக “எக்கிய ராஜ்ஜிய” இடைக்கால வரைபைப்பற்றி பேசியிருக்கிறார். இடைக்கால வரைபை அடுத்தடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது அரசாங்கத்தின் நோக்கம் என்று கஜேந்திரகுமார் கூறுகிறார்.

கடந்த செப்டம்பர் மாதம் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் அரச பிரதிநிதியும் துறைசார் நிபுணர்களும் சுவிற்சலாந்தில் நடந்த ஒரு சந்திப்பிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அது இனப்பிரச்சினைக்கான தீர்வு, சமஸ்டி முதலான விடையங்களைக் குறித்து ஆராய்வதற்கான ஒரு சந்திப்பாகும். புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளும் அங்கே இருந்தார்கள். இந்தச் சந்திப்பில் அரச பிரதிநிதி மேற்கண்டவாறு பேசியுள்ளார்.

ரணில் மைத்திரி அரசாங்கத்தின் காலத்தில் உருவாக்கப்பட்ட “எக்கிய ராஜ்ஜிய” இடைக்கால வரைபு ஆனது அப்பொழுது தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருந்த கூட்டமைப்பின் பங்களிப்போடுதான் உருவாக்கப்பட்டது. அதாவது அந்த இடைக்கால வரைபுக்கு தமிழ் மக்களின் ஆணையும் உண்டு என்று அரசாங்கம் கூறுகின்றது. அப்பொழுது கூட்டமைப்பின் தலைவராக இருந்த சம்பந்தரின் வழிநடத்தலின் கீழ் சுமந்திரன் முன்னணியில் நின்று அப்புதிய யாப்பை உருவாக்கும் பணிகளில் பங்களிப்பைச் செய்தார். அதனால் அந்த இடைக்கால வரைபு தன்னுடைய குழந்தை என்றும் சுமந்திரன் கருதக்கூடும். அதுமட்டுமல்ல அந்த இடைக்கால வரைபுக்குப் பங்களிப்புச் செய்த கட்சிகளில் ஜேவிபியும் அடங்கும். எனவே அது ஜேவிபியின் குழந்தையும்தான். இப்படிப் பார்த்தால் தானும் சேர்ந்து உருவாக்கிய ஓர் இடைக்கால வரைபை அடுத்தடுத்த கட்டத்திற்குக் கொண்டு போக தேசிய மக்கள் சக்தி முயற்சிக்கின்றது என்று கஜேந்திரகுமார் சந்தேகிக்கின்றார்.

இதில் தேசிய மக்கள் சக்தி மேலும் ஒரு விடயத்தை கூறுகிறது. என்னவென்றால் அந்தப் புதிய யாப்புக்கான இடைக்கால வரைபுக்கு தமிழ் மக்களின் ஆணை இருப்பதைப் போலவே இப்பொழுது தனக்கு தமிழ் மக்களின் ஆணை உண்டு என்று. அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தனக்கும் ஆணை வழங்கி இருப்பதினால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் தனக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் செயற்பட முடியும் என்று தேசிய மக்கள் சக்தி கூறிவருகிறது.

அது ஓர் இடைக்கால வரைபுதான். அதனை ஒரு புதிய யாப்பாக வரைந்து அதன் பின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு அந்த பெரும்பான்மை உண்டு. எனவே அது நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டால், அடுத்த கட்டம் பொதுஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், அரசாங்கம் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் விடயத்தில் ஈடுபடப் போகிறது என்று கஜேந்திரகுமார் எச்சரிக்கிறார்.

(தொடர்ச்சி 15 பக்கம்)

**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION (OSTBA)**
**EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA**
ஒன்டாரியோ முது தமிழர் நலன்புரி ஆதாயமற்ற சங்கம் # 1866873
**Address: OSTBA, PO. Box 48068 Dundas & Sheppard, Mississauga ON L5A 4G8**



## Helping Seniors Live with Dignity, Security, and Peace of Mind:

As many of our seniors reach advanced age, it is natural to experience concerns about health, financial security, and emotional well-being. Feelings of loneliness, neglect, and even elder abuse are unfortunate realities for some in our community. In this context, any collective and cooperative effort to improve our financial and emotional security can go a long way toward alleviating these worries and restoring peace of mind. Establishing a self-funded Death Donation Reserve Fund, exclusively contributed to by members, to support families at the time of a member's passing. Inspired by similar Tamil benevolent organizations in Sydney, Australia, OSTBA was officially registered as a not-for-profit organization in Ontario in 2012. Since its inception, OSTBA has made payments to the families of seventy-seven (77) members. We have members from numerous Senior Tamil Organizations in Ontario.

## Membership Eligibility:

To become a member of OSTBA, you must:

- Be between the ages of 60 and 75
- Be a citizen or permanent resident of Canada
- Be free from any terminal illness at the time of application
- Be a paid member of a recognized Tamil seniors association (provide name and membership number)
- Provide two nominees, one of whom will receive the Death Donation upon your passing (subject to OSTBA constitution requirements)
- Declare that the information in your application is true and agree to abide by the OSTBA Constitution



## Membership Contributions & Benefits:

- Initial deposit starts as low as $95.00
- Annual Membership fee is $20.00
- On each death call, members contribute $20.00
- Members must maintain a minimum balance of $85.00 in their account
- In recent months (2025), the average payout to the family of a deceased member was approx. $4,700.00 while each member only contributed $20 per call
- Contributions are held in the Death Donation Reserve Fund (By-Law #3.2)
- No office or administrative overheads as OSTBA is entirely run by an elected volunteer Board operating remotely

## Important Membership Conditions:

To become a member of OSTBA, you must:

- You are a Provisional Member for the first 12 months from your initial payment
- No benefits are available during the first year of membership
- Members may also make a special declaration to assign benefits to two individuals, subject to OSTBA's constitution.

For more information please contact:
Tel: **416-473-6880 / 416 -629-0065**
Email: **ostba2019@gmail.com**
Web: **ostb5.ca**

கனடிய செய்திகள்
Canadian News

# மொன்றியால் மாநகர் வாழ் "தமிழ்மாமணி" க. உயிரவன் அவர்கள் 25-10-2025 அன்று மணிவிழாக் கொண்டாட்டத்தில் மூழ்கவுள்ளார்



பாட்டருவியான அவரைப் பாராட்ட உலகெங்குமிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் நேரிலும் இணையத்திலும் இணையவுள்ளார்கள்.

கனடா - மொன்றியால் மாநகரில் கடந்த பல வருடங்களாக வாழ்வது மாத்திரமல்ல தமிழ்ப் பணியும் சமூகப் பணியும் அவசியமானவை என்ற நிலைப்பாட்டோடு தொடர்ச்சியாக பயணித்து வரும் பாட்டருவி தமிழ்மாமணி கவிஞர் க. உயிரவன் அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு 25-10-2025 அன்று சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மொன்றியால் மாநகரில் அவரது நண்பர்களும் குடும்பத்தினரும் எடுக்கும் விழா நடைபெறவுள்ளது.

மேற்படி மணிவிழா நிகழ்விற்கு மொன்றியால் வாழ் வர்த்தகப் பிரமுகரும் சமூகச் செயற்பாட்டாளருமான ஏ.எம். இராஜபோல் அவர்கள் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றுள்ளார்.

பன்முக ஆற்றலுள்ள க. உயிரவன் அவர்களைப் பாராட்டி மகிழ்வதற்காக உலகின் பல நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களின் விருப்பத்தின் பேரில் இடம்பெறும் இவ்விழா சிறப்புற நடைபெற கனடா ரொறன்ரோ மாநகரிலிருந்து "கனடா உதயன்" வெளியீட்டு நிறுவனம் மற்றும் "யுகம்" வானொலி நிறுவனம் ஆகியவற்றின் அதிபர்கள் தமது குழுவினரோடு இணைந்து வாழ்த்துகின்றார்கள். அவரைப் பாராட்ட விரும்புவோர் 1(514) 867-1551 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பு வவுணதீவில் போலிப் பத்திரம் தயாரித்து மணல் கடத்திய இருவரை கொழும்பிலிருந்து வந்த புவிச்சரிதவியல் பணியக உத்தியோகத்தர்கள் கைது செய்தனர்



மட்டக்களப்பு வவுணதீவில் தீயை காட்டினால் அழியும் மை கொண்ட பேனாவினால் கட்டிட பொருட்கள் விற்பனை நிலையத்தில் இருந்து நுகர்வோர் வரை எடுத்துச் செல்வதற்கான மணல் போக்குவரத்துக்கான அனுமதி பத்திர விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உழவு இயந்திரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவரை கொழும்பில் இருந்து வந்த புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் சோதனை பிரிவினர் 17ம் திகதி வெள்ளிக்கிழமை கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.



புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் சோதனை பிரிவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சம்பவ தினமான பணியகத்தின் கொழும்பில் இருந்து வந்த சோதனை பிரிவினர் வவுணதீவு பிரதேசத்தில் வீதியால் மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தை நிறுத்தி அனுமதிப்பத்திரத்தை சோதனை செய்தனர்.

இதன் போது பேனாவினால் நிரப்பபட்ட அந்த அனுமதி விண்ணப்ப படிவத்திற்கு அருகில் தீயை காட்டி சோதனை செய்த போது அது அழியும் மையினால் கொண்ட பேனாவால் நிரப்பப்பட்டு ஒரு உழவு இயந்திரத்திற்கு 6 போலி அனுமதி பத்திரத்தை போலியாக பூர்த்தி செய்து சட்டவிரோதமாக மண் அகழ்ந்து அதனை கடத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதை கண்டுபிடித்து அவரை கைது செய்தனர்.

அதேவேளை வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் மணல் ஏற்றி சென்ற உழவு இயந்திரத்தை நிறுத்தி சோதனையின் போது போலியாக தயாரித்த அனுமதிப்பத்திரம் என கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவரையும் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் இரு உழவு இயந்திரங்களையும் எடுத்து சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக வவுணதீவு பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுணதீவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# "கிரிவலம்" அறக்கட்டளையின் கிழக்கு மாகாண காரியாலயம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் திறந்து வைக்கப்பெற்றது!



ஜேர்மனியை தலைமையகமாக கொண்டு இயங்கிவரும் கிரிவலம் அறக்கட்டளை கிழக்கு மாகாணத்திற்கான காரியாலயம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ள கட்டிடத்தில் அண்மையில் அறக்கட்டளையின் கிழக்கு மாகாண செயலாளர் பி. கே.லிவாஸ் தலைமையில் சம்பிராய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.





அறக்கட்டளையின் கிழக்கு மாகாண செயலாளர் பி.கே. லிவாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அதிதிகளாக களுவாஞ்சிக்குடி பிரதேச சபையின் தவிசாளர் என்.வினோராஜ், பட்டிருப்பு மகா வித்தியாலய அதிபர் எம்.சபேஷ் குமார், சட்டத்தரணி கே. கிருபாகரன:. கிராம உத்தியோகத்தர் எம்.அனோஜன், முல்லைத்தீவு ஜீவ ஊற்று அன்பின் கரம் அமைப்பின் உப தலைவர் எஸ்.எஸ்.சீலன், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கபில பண்டார, அறக்கட்டளையின் பொருளாளர் கே.ரி. பாரதி உட்பட அறக்கட்டளையின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு காரியாலயத்தை சம்பிராய பூர்வமாக நாடாவெட்டி திறந்துவைத்தனர்.

இதனை தொடர்ந்து முதியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தனர்.

# மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த தர்மலிங்கம் சுரேஸ் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கொழும்புக்கு அழைக்கப்பெற்று விசாரணையின் பின் விடுவிப்பு

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



கொழும்பிலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவினர் பணியகத்திற்கு வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்கு வரவழைக்கப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் 22ம் திகதி அன்று புதன்கிழமை (22) ஆஜராகி சுமார் 5.00 மணித்தியாலம் வாக்குமூலம் அளித்த பின்னர் வெளியேறியுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் வீட்டிற்கு கடந்த 18ம் திகதி சென்ற பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் முகநூலில் கட்சியின் தலைவர் விடுதலைப் புலிகளின் தலைவர் ஒன்றாக இருந்த புகைப்படத்தை முகநூலில் பதிவேற்றியதாகவும் அது தொடர்பான விசாரணைக்கு கொழும்புக்கு வருமாறு கடிதத்தை வழங்கினர்.

இந்த நிலையில் கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின் பணியகத்துக்கு சென்ற அவரிடம் சுமார் 5.00 மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணை இடம்பெற்றதாகவும் அதற்கான வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் அங்கிருந்து மாலை 3.00 மணிக்கு வெளியேறியுள்ளதாக தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

# இலங்கையின் பல பகுதியிலும் நிலை எடுக்கும் பாகிஸ்தான்!

## தனக்கு மட்டுமன்றி பிறிதொரு நாட்டிற்கும் சேர்த்தே உளவு பார்ப்பதாக ''கசிந்துள்ள'' தகவல்

இந்தியாவின் பரம எதிரிகளான பாகிஸ்தான் மற்றும் சின நாடுகள் இந்தியாவின் சகல திசைகளிலும் நிலை எடுத்து தமக்கான பணியை முன்னெடுப்பர் என்பதில் சந்தேகம் இல்லை. இதற்காக இந்தியாவிற்கு அண்மையாக உள்ள வடக்கின் 3 மாவட்டங்களில் அதிக கரிசணைகாட்டுவது ஒன்றும் ஆச்சரியம் இல்லை, இதற்காக தமது உளவுப் பணியை முன்னெடுக்க எவ்வளவு நிதியையும் செலவு செய்யத் தயாராக உள்ள சீனாவின் உளவுப் பணியில் பயிற்றப்பட்ட சீனர்களை நேரடியாகப. பயன்படுத்துவதற்கு ஒரேயொரு பெரும் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் அதாவது வடக்கு தமிழர்கள் மத்தியில் ஒரு சீனர் நின்றாலும் இலகுவில் அடையாளம் காணக்கூடிய முகத்தோற்றத்தை கொண்டவர்கள் என்பது மிகப் பெரும் பாதிப்பை சீனா எதிர்கொள்கின்றது.


இந்த விடயத்தை மாற்றியமைக்க திட்டமிட்ட சீனா இலங்கைத் தமிழர்களின் தோற்றத்தை ஒத்த தமது விசுவாசிகளை களம் இறக்கும. நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதற்காக அண்மை ாலத்தில் அதிக பாகிஸ்தானியர்கள் தருவிக்கிப்படுகின்றனர்.


இதன்போது சிலர் பாகிஸ்தானின் கலாச்சார உடையை ஒத்த ஆடையை அணிந்தாலும் சிலர் இலங்கைத் தமிழர்கள் அணியும் ஒத்த ஆடையும் அணிகின்றனர். இப்போது சீனா ஒரு கல்லில் இரண்டு மாங்காயை வீழ்த்துகின்றது. அதாவது பாகிஸ்தானிடமிருந்து தமக்கு தேவையான தரவைப் பெறுவது மட்டுமன்றி பாகிஸ்தானும் இந்தியாவிற்கு எதிராக செயல்படும்.

கடந்த ஒரு மாத காலத்தில் மன்னாரில் பாகிஸ்தானியர்கள் முகாமிட்டுள்ளனர். கிளிநொச்சியில் இரு வர்த்தக நிலையத்தை நடாத்துகின்றனர். வடக்கிற்கு பயணித்த 13 நாட்டு இராணுவ அதிகாரிகள் அணியிலும் பாகிஸ்தான் கேணல் தர அதிகாரி அங்கம் வகித்தார். இவை அனைத்திற்கும் அப்பால் 2025-10-22 அன்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பாகிஸ்தான் இலங்கை இராணுவ அதிகாரிகள் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இங்கே குறிப்பிட்டவை வெளியே அறிந்த சில விடயங்கள் என்பதும் விசேட அம்சமாகும்.

# சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சித்தார்த்தன் போன்றவர்கள் ''நம்பகத்தன்மையற்றவர்கள். இருவரும் பதவிகளைப் பெற எமது பெறுவதே நோக்கமாகக் கொண்டவர்கள்.



### நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு




ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது பதவிகளைபெற எமது உதவிகளைப் பெற்று செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக கூட்டங்கள் வைப்பது தாங்களாக ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றம். என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கூட்டத்தை நடத்தியது தமிழ் கட்சிகள் அல்ல, அது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே நடாத்தியது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகள் கூடி மாகாண சபையை வைக்க வேண்டும் என்பது தொடர்பிலும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும. கதைத்துள்ளனர். நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மிகத் தெளிவாக ஒற்றையாட்சி முறைமைக்குள் தமிழ் அரசியல் நடாத்த அறவே இடமில்லை என்பதனை எழுத்து மூலமாக தெளிவாக வலியுத்தி வந்தனாங்கள். அது மட்டுமன்றி 13 ஆம் திருத்தம் இறுதி தீர்வும் அல்ல ஏக்கியராச்சி யோசணையை நிராகரிக்கப்பட வேண்டும் என்ற இரண்டும் ஒப்பந்தத்தில் தெளிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் ஒப்பமிட்டனர். அதற்குப் பிறகு உள்ளூராட்சி சபையில் எங்களோடு இணைந்து நாங்கள் விட்டுக் கொடுப்புகளை செய்து அவர்களிற்கு பதவிகளை கொடுத்த பின்பு நன்மைகளை பெற்ற பிறகு, எம்மோடு ஒப்பந்தம் செய்திருக்காது விட்டால் அவர்கள் எந்தவொரு சபையிலும் பதவிகளை எடுத்திருக்க முடியாது தவிசாளர் பதவிகளையும் பெற்றிருக்க முடியாது. அப்படி பதவிகளைபெற எமது உதவிகளைப் பெற்று செய்த ஒப்பந்தங்களை மீறுகின்ற வகையில் அவர்கள் இந்த நேரத்தில் 13 ஆம் திருத்தம் சம்பந்தமாக கூட்டங்கள் வைப்பது தாங்களாக ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகத்தான் நாங்கள் பார்க்கின்றம்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுடன் ஒரு மாதங்களின் முன்பதாக நான் வெளிநாடுகளிற்கு பயணிப்பதற்கு முதல் அதாவது 13 ஆம் திருத்தம. தொடர்பில் அவர்கள் திருகோணமலையில் நடாத்திய சந்திப்பிற்கு முன்பே தெளிவாக இந்த விடயத்தை 13 ஆம் திருத்த விடயத்தில் ஈடுபட்டால் ஒப்பந்தத்தில் இருந்து விலகும் செயலாகவே நாம் பார்ப்போம் என்பதை நாம் அவர்களிடம் சொல்லியிருந்தோம். சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சித்தார்த்தன் போன்றவர்கள் "நம்பகத்தன்மையற்றவர்கள். இருவரும் பதவிகளைப் பெற எமது பெறுவதே நோக்கமாகக் கொண்டவர்கள் என்றார்.

ஆய்வு நூல் வெளியீடு அழைப்பிதழ்







Dr. புட்பா கிறிட்டி Ph.D. அவர்கள் எழுதிய
"நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ், சமய, சமூகப்பணிகள்"

காலம் : நவம்பர் 16, 2025, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 6 மணி
இடம் : புனித ஆரோக்கிய மாதா ஆலய மண்டபம்
(Our lady of Good Health)
131 Birchmount Rd. Toronto, ON, M1N 3J7
(Birchmount and Danforth Avenue)

அன்புடையீர், வணக்கம்.

எனது முனைவர் பட்ட ஆய்வினை தமிழ் அறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் புகழினை உலகிற்கு உணர்த்தும் வகையில் அதனை ஒரு இலக்கியமாக படைத்துள்ளேன். அதன் வெளியீட்டு விழாவினை சிறப்பாக கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு அன்புடன்
முனைவர். புட்பா கிறிட்டி
மற்றும் வெளியீட்டு விழாக் குழுவினர்

தொடர்புகளுக்கு : 647 703 5538



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் - கனடா
நடாத்தும்

24வது நத்தார் இன்னிசை ஆராதனை

DRIEBERG COLLEGE ALUMNI ASSOCIATION
CHAVAKACHCHERI – CANADA
Presents the

24th ANNUAL CHRISTMAS CAROL SERVICE

திகதி: சனிக்கிழமை நவம்பர் 08, 2025
Saturday November 08, 2025
நேரம்: 6:00 மாலை - 6:00PM
இடம்: Milliken Wesleyan Methodist Church
3 Clayton Drive, Markham, Ontario L3R8N3
(Kennedy Rd and North of Steeles Ave. E.)

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 24வது நத்தார் இன்னிசை ஆராதனையில் பங்குபற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

Contacts:
Rajagopal Mathialagan: 416-277-1067 Mohan Devabalan: 416-274-2169
Reginald Thevaranjan: 647-740-2965 Ebenezar Thevasagayam: 647-895-8001
Gunam Hunt: 905-472-0379


Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.
குறைந்த கட்டணத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்
Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுழற்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்
நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006
ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006
councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com 416-396-7222



PLEASE JOIN US FOR THE
Grand Opening
of
PATHWAY TO WELLNESS CLINIC
Dr Nelantine Jesuthasa
Sunday, November 2nd 2025
From 11am to 4pm
7595 Markham Rd Unit 19
Markham, ON L3S 0B6
Please come and show your support!!
437 349 8404
Pathwaytowellnessclinic@gmail.com


TM தமிழ் மிரர் Tamil Mirror
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY
20TH YEAR ANNIVERSARY
CELEBRATIONS &
AWARDS GALA 2025
CHIEF GUEST
KAVIGNAR THAAMARAI
15 NOVEMBER
time
4.30 PM
VEDIC CULTURAL CENTRE
4345, 14 TH AVE, AT
KENNEDY RD, MARKHAM
FOR MORE INFO: 416-697-0126

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வாழ்நாள் சாதனையாளர் விருது-2025

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் "எழுத்தால் இணைவோம்" என்ற தாரக மந்திரத்தை உச்சாடனம் செய்தவாறே கடந்த 32 ஆண்டுகளாக தமிழ் இலக்கியப் பணிகளில் அர்ப்பணிப்போடு ஈடுபட்டு வருகிறது. இலக்கிய சாதனையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு "வாழ் நாள் சாதனையாளர் விருது"வழங்கி அவர்களை உன்னதம் செய்வதும் அதன் ஊக்கமளிக்கும் பணிகளில் ஒன்றாகும்.





இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவர், ஊடகர் இரவீந்திர நாதன் கனகசபையின் தலைமையில் டொரென்டோ நகரில் இடம்பெறுகிறது.

ஸ்காபறோ சிவிக் சென்றரில் நடைபெறும் விழாவில் தமிழுக்கும், தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பங்களிப் பாற்றிவரும், முதுமையில் கற்று முதுமாணிப் பட்டம் பெற்ற திருமதி.செல்லையா யோகரத்தினம், ஆவணக் காப்பாளர் நகுலசிகாமணி நடனசிகாமணி, கலாநிதி. பார்வதி கந்தசாமி, சொற்கோ வி.என். மதியழகன், எழுத் தாளர் குரு அரவிந்தன் ஆகியோர் வாழ்நாள் சாதனை யாளர் விருதுகளை அடைந்திடுவர்.

இணையத்தின் பத்தாவது ஆண்டு விழாவிலும், பின்னர் வெள்ளி விழாவிலும் அமரர்கள் வி.கந்தவனம், பொ.கனகசபாபதி, வள்ளிநாயகி இராமலிங்கம், க.தா. செல்வராசகோபால், கே.எஸ்.நடராஜா, க. செபரத்தினம், மா.சே.அலெக்ஸாந்தர், மொஹமட் ஹன்ஸீர் ஆகியோர் விருதுகள் பெற்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் எழுத்தாளர் இணையத்தின் அப்போதைய தலைவராக விளங்கிய அகணி சுரேஸ் தலைமையில் நடைபெற்ற விழாவில் பேராசிரியர்களான பாலசுந்தரம் இளையதம்பி, நாகராஜ ஐயர் சுப்பிரமணியன், முனைவர்களான பால.சிவகடாட்சம், செல்வநாயகி ஸ்ரீதாஸ் மற்றும் தங்கராசா சிவபாலு, பாலா குமாரசாமி (தேவகாந்தன்), சிந்தனைப்பூக்கள் பத்மநாதன், தாமோதரம்பிள்ளை சண்முகநாதன், "வீணை மைந்தன்" தெய்வேந்திரன் சண்முகராஜா அகியோருக்கு விருதுகள் கொடுக்கப்பட்டன.

இணையத்தின் தற்போதைய தலைவர் இரவீந்திரநாதன் கனகசபை தலைமையில் கடந்த வருடம் நடைபெற்ற விழாவில் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், கலாநிதி திருமதி கௌசல்யா சுப்பிரமணிய ஐயர், தேசபாரதி வே. இராசலிங்கம், எழுத்தாளர் முருகேசு பாக்கியநாதன், உதயன் ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம், கலைஞர் வைரமுத்து திவ்வியராஜன் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.பத்திரிகை செய்தி எழுத்தாளராக ஊடகத் துறையில் கால் பதித்து ஒலிபரப்பாளராக பரிணமித்த மூத்த ஒலிபரப்பாளர் என்ற தகுதியோடு தமது அனுபவங்களை எதிர்கால சந்ததியிடம் கையளிப்பதற்காய் உரைநடை இலக்கியமாக நூல்களைப் படைத்துவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் வி.என்.மதியழகன் அதற்காய் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் உயர் அங்கீகாரத்தை ஏனைய எழுத்தாளர்களுக்கு சமாந்தரமாய் அடைதல் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# மாகாண சபை தொடர்பில் மிகப் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒரு ஒற்றுமைப்பாடும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கின்றதாம்! — சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்.)

மாகாண சபை தொடர்பில் மிகப் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒரு ஒற்றுமைப்பாடும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கின்றன. இவற்றை நாங்கள் இன்னும் ஒருவரும் மிகுதி இல்லாமல் அனைவரையும் இணைத்துக்கொண்டு போகும் முயற்சியாகத்தான் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் விபரம் தெரிவிக்கையில்,

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலே ஒரு தொடர் கருத்தரங்குகளை வடக்கு கிழக்கில் நடாத்தி வருகின்றது. இதில் தமிழ் தரப்பில் இருக்கக்கூடிய ஏனைய தரப்புக்களும் இதற்குள் வந்து இணைய வேண்டும் என்பது எமது எல்லோரது விருப்பம். அது தமிழ் அரசுக் கட்சியாக இருக்கலாம் அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக இருக்கலாம், ஏனைய கட்சிகளாக இருக்கலாம். இவர்கள் அனைவரையும் இணைத்துக்கொண்டு போக வேண்டும் என்பதில் எங்களுக்குள் ஒருமித்த கருத்து இருக்கின்றது.

ஏற்கனவே வவுனியாவில் இடம்பெற்ற கருத்தரங்கில் எம்.ஏ.சுமந்திரன், ப.சத்தியலிங்கம் போன்றோர் கலந்துகொண்டிருந்தனர். ஆகவே அவர்கள் மாகாண சபைத் தேர்தல், மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாக ஒரு ஒருமித்த கருத்தில் இருக்கின்றார்கள் என்பது தெளிவானது. இருந்தபோதும் ஒரு கூட்டாக வடக்கு கிழக்கில் மாத்திரம் இல்லை ஏனைய பிரதேசங்களிலும் மென்னெடுத்து கொண்டு போகவேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் அரசாங்கம் தேர்தலை நடாத்தாமல் மாகாணங்களிற்குள் எல்லைகளைப் பிரித்து அதற்குப் பின்புதான் தேர்தல் என்ற ஒரு தொனி தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கின்றது. அவ்வாறு நடக்குமாக இருந்தால. தேர்தல் காலவரையின்றி பின்போடலாம் என்ற ஒரு அச்சம் தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கின்றது. ஆகவே இதனை மாற்றி தேர்தலை குறைந்தபட்சம் வரும் வருடத்தின் ஆரம்பத்திலேனும் வைக்கப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் அதாவது 1988 ஆம் ஆண்டு எவ்வாறு 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அதிலிருக்கக்கூடிய அனைத்து அதிகாரங்களும் மீளவும் தமிழ் மக்களிற்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதும் எமது கருத்தாகும்.




இந்த அரசாங்கத்திற்கும் நாங்கள் ஒரு தெளிவான கருத்தை சொல்லியிருக்கின்றோம் ஜனநாயக ரீதியாக ஏற்கனவே இந்த நாட்டில் அரசியல் சாசனத்தில் இந்த அதிகாரங்கள் மாகாணங்களிற்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. அதற்கான தேர்தல்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த மட்டில் கடந்த 7, 8 வருடங்களாக நடைபெறவில்லை. ஆகவே உடனடியாக அந்த தேர்தல்கள் நடாத்தப்பட்டு அந்த அதிகாரங்கள் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் வசம் கொடுக்கப்பட வேண்டும். அவை முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் மிகத் தெளிவாக அரசாங்கத்தை கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே அந்த வகையில. மிகப் பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் மத்தியில் ஒரு ஒற்றுமைப்பாடும் ஒருமித்த கருத்துக்களும் இருக்கின்றது இவற்றை நாங்கள் இன்னும் ஒருவரும் மிகுதி இல்லாமல் அனைவரையும் இணைத்துக்கொண்டு போகும. முயற்சியாகத்தான் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது தமிழ் மக்கள் கூட்டணியின் விக்னேஸ்வரனுடனும் பேச ஆலோசித்துள்ளோம் என்றார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# தமிழூக்கும் மீசையுண்டு...

**வீணைமைந்தன் - கனடா**

**கடந்த 04-07-2025 அன்று தனது 91வது அகவையில் தமிழ்நாட்டில் அமரத்துவம் எய்திய "பெருங்கவிக்கோ" என்னும் புகழுக்குரிய வா.மு. சேதுராமன் அவர்களது நினைவாக...**



**க**டந்த 19-10-2025 அன்று ரொறன்ரோ மாநகரிலிருந்து மொன்றியால் நகரில் நடைபெற்ற ஒரு கர்நாடக இசையரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்த கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் எனக்காக கொணர்நத "தமிழ்ப் பணி" யூலை மாத இதழ் பிரதியொன்றின் முன் அட்டையில் காணப்பட்ட புகைப்படம் மற்றும் செய்தியின் வாயிலாக எம்மைவிட்டு நீங்கிச் சென்ற வா.மு. சேதுராமன் அவர்களின் பிரிவுத்துயரின் வலியை அனுபவித்தேன்.



"தமிழ்ப்பணி" சஞ்சிகையானது அமர் வா.மு. சேதுரரமன் அவர்களால் நிறுவப்பெற்று தொடர்ச்சியாக பலவருடங்களாக மாதாந்தம் சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதை தற்பொழுது அவரது புதல்வரும் கவிஞருமான வா.மு.சே. திருவள்ளுவர் அவர்கள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார் என்பது தமிழ் இலக்கிய தளத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் தகவலாகும்.

"மீசைக் கவிஞர்" என்று உலகத் தமிழர்களால் ஆசையுடன் அழைக்கப்பெற்ற அமர் வா.மு. சேதுரரமன் அவர்களுடனான எனது தமிழுறவும் நட்பும் 1996ம் ஆண்டு ஆரம்பித்தது. அந்த வருடம் ரொறன்ரோ மற்றும் மொன்றியால் நகரங்களில் நடந்தேறிய "உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டு" நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த அறிஞர் பெருமக்களில் வா.மு.சே. ஐயா அவர்களும் ஒருவராக விளங்கினார். மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பெற்றிருந்த சிறப்புக் கவியரங்கத்தில் அவரது தலைமையில் நானும் எனது கவிதையை வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது.

அன்றிலிருந்து வா.மு. சேதுராமன் ஐயாவுடனான தமிழ் உறவும் இதயபூர்வமான நட்பும் வேரூன்றி கிளைகளைப் பரப்பி நெடுங்காலம் நீடித்துச் சென்றது.

அதனைத் தொடர்ந்து இரு தடவைகள் ரொறன்ரோ மற்றும் மொன்றியால் அன்பர்களின் அழைப்பில் கனடா வந்திருந்த போதும் அவரோடும் நெருங்கி உறவாட வாய்ப்பு கிட்டியது. மொன்றியாலில் அப்போது காப்புறுதி முகவராகவும் கவிஞராகவும் அறியப்பெற்றவரான அமரர் எஸ்.பி. கனக்ஸ் (கல்கிதாசன்) அவர்களது இல்லத்தில் எமது வா.மு.சே ஐயா அவர்கள் சில நாட்கள் விருந்தினராக தஙியிருந்தார். இதனால் தினமும் அவரைச் சந்திப்பதும் உரையாடுவதும் எமக்குக் கிட்டிய பெரும் வாய்ப்பாக அமைந்தது.

"தனது மீசையுடன் தமிழ் வளர்த்தும். தமிழ் வீச்சால் அனைவரையும் நிமிர வைத்தும் தமிழ்நாட்டில் எழுச்சிக் கவி பாரதி, மா.பொ.சி. பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் வரிசையில் வா.மு.சே ஐயாவின் ராஜராஜசோழப் பெருவேந்தனின் வாள் போன்ற தனது மீசையை அடிக்கடி தடவிய வண்ணம் தமிழ்க் கவிதைகளை எழுதிக் குவிப்பார். எம்மை தலை நமிரவைப்பார். நம் இனிய தமிழ் மொழியின் பால் பற்றுக் கொண்டவர்களுடன் கொண்டாடி மகிழ்வார்.

"இசை தரும் வீணை இன்பம்
இடர் தவிர் ஆற்றல் இன்பம்
நசை தரு செயல்கள் இன்பம்
விசை தரு வீணைமைந்தன்
வெல்க சண்முகராக பாக்கள்
மிசை எழு இன்பம் எல்லாம்
வீணை இன்பம் எழுச்சி நல்கும்

கவிதைக்கோ நாயகராம்
கந்தவனம் மணிவிழாவில்
செவியின்பக் கவிதை தந்தார்
திகழ்கவி கண்ணதாசன்
புவிகமழ் நயத்தைச் சொன்னார்
புலம் பெயர்ந்தே வாழ் மைந்தன்
தவமனக் கவிதையெல்லாம்

தமிழ் மணம் கமழும் ஆக்கம்"

என என் கவித்தமிழைப் பாராட்டிய நினைவுகளை மீண்டும் நெஞ்சமதில் கொண்டு வந்து வசிஷ்டர் வாய்ப் பாராட்டுதலாக நினைந்து புளாங்கிதமும் பூரிப்பும் அடைகின்றேன்.

அமரர் வா.மு.சே அவர்கள் பன்னாட்டுத் தமிழுறவை செவ்வனே வளர்த்து தமது வாழ்நாட்கள் முழுவதும் ஓயாத தமிழ்ப் பணியை உலகின் பல நாடுகளில் விதைத்துச் சென்றார். அவரது இழப்பு உலகார்ந்த தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாதாத ஒன்றாகும்.

மேலும், கடந்த 02-10-2025 அன்று அமெரிக்காவில் மறைந்த வா.மு. சேதுராமன் அவர்களைக் கொண்டாடும் முகமாக உலகத் தமிழ் அறக்கட்டளை, பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், மற்றும் வாஷிங்டன் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய "புகழொளி" நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. அமெரிக்காவில் வாழும் ஐயாவின் இரு புதல்வர்கள் உட்பட தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த வா.மு.சே. திருவள்ளுவர் அவர்களும் இணைந்து இந்த நினைவு நிகழ்வை நடத்தினார்கள். மேற்படி புகழஞ்சலி நிகழ்வானது ஒரு மண்டபத்தில் சபையோர் நிறைந்திருக்கவும் இணையவழி ஊடாகவும் நடைபெற்றது..

மேற்படி நிகழ்வுகளுக்கு கனடாவிலிருந்து சில அன்பர்கள் அழைக்கப்பெற்றிருந்தாலும் அவர்களால் கலந்துகொள்ள முடியவில்லை. என்பதும் கவலைக்குரியதே!

மேற்படி நிகழ்வில் எடுக்கப்பெற்ற புகைப்படங்கள் இரண்டும் மொன்றியால் நகரில் பல வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற கவிநாயகர் கந்தவனம் அவர்களின் மணிவிழாவில் எடுக்கப்பெற்ற படம் ஒன்றும் இங்கு காணப்பெறுகின்றன.



(8 பக்கம் தொடர்ச்சி)

## புதிய யாப்பா? அல்லது மாகாண சபைத் தேர்தலா?

ஆனால் கடந்த வாரம் வரையிலும் அவரோடு கூட்டில் இருந்த சுரேஸ் பிரேமசந்திரனைப் போன்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் அவ்வாறு கருதவில்லை என்று தெரிகிறது. அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல் ஒன்றை நடத்துவதில்தான் நாட்டமாக இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை விடவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தினால் இந்தியாவையும் சமாளிக்கலாம் தமிழ்க் கட்சிகளையும் சமாளிக்கலாம். அதில் கஜேந்திரக்குமார் மட்டும்தான் பிரச்சினையாக இருப்பார். ஆனால் அவருடைய கட்சியும் மாகாண சபைத் தேர்தலில் ஈடுபடும் என்று தெரிகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று புறப்பட்டால் அது இலங்கைத் தீவின் இன முரண்பாட்டு அரசியலில் அதிகம் ரிஸ்க்கானது. அப்படி ஒரு ரிஸ்கை எடுப்பதற்கு அனுர அரசாங்கம் தயாரா?

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை முதலில் வைக்குமா? அல்லது இனப்பிரச்சனைக்கான தீர்வை நோக்கி ஒரு புதிய யாப்பை வரையும் வேலையை முதலில் செய்யுமா? என்பது இப்பொழுது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தில் தங்களுக்கு இடையே வேறுபட்ட பார்வைகளைக் கொண்டிருப்பது மட்டுமல்ல, தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடுகளும் அதிகரிக்கலாம் என்று தெரிகிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பின் ஏற்பட்ட புதிய கூட்டுக்குள் சைக்கிள் முன்னணியோடு சங்கு இணைந்திருந்தது. ஆனால் கடந்த வாரம் சங்குக்கும் சைக்கிளுக்கும் இடையிலான உறவு இக்கட்டுரைகளில் ஏற்கனவே கூறப்பட்டது போல பெருமளவுக்கு ஈடாடத் தொடங்கிவிட்டது. கஜன் - சுரேஷ் ஆகியோரின் ஊடக வெளிப்பாடுகள் அதைத்தான் காட்டுகின்றன.

மாகாண சபைத் தேர்தல் நடக்குமாக இருந்தால் அதில் சைக்கிளைத் தனிமைப்படுத்தும் விதத்தில் ஒரு கூட்டை உருவாக்க சுமந்திரன் முயற்சிக்கலாம். சங்கு, மணிவண்ணன் ஆகியோரை அவர் அதற்குள் இணைக்க முயற்சிக்கலாம். அதாவது மாகாண சபைத் தேர்தல் என்று ஒன்று நடக்குமாக இருந்தால் அது தமிழ் கட்சிகளுக்கு இடையிலான ஐக்கியமின்மையை பிரதிபலிக்கும் ஒரு தேர்தலாகவே அமையக்கூடும். அது இக்கட்டுரைகளில் திரும்பத் திரும்ப கூறப்படுவது போல வடக்கு கிழக்கு மாகாண சபைகளுக்குள் தனது கால்களைப் பலமாக ஊன்றலாம் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பை ஊக்குவிக்கக் கூடியது.

உலக செய்திகள்
World News

# லண்டன் நாட்டிய உலகில் "நர்த்தன கலாலயம்"



நாட்டிய உலகில் சிறப்பாக இங்கிலாந்தில் நாற்பது ஆண்டுகள் சிறந்ததும் அர்ப்பணிப்புள்ளதுமான நடனச் சேவையை வழங்கிவரும் நர்த்தன கலாலயம், தனது நாற்பதாவது ஆண்டின் அறுவடையாக நர்த்தன உற்சவம் என்ற நடன நிகழ்ச்சியை கடந்த 18.10.2025 சனிக்கிழமை எட்மன்ரன் சில்வர் வீதியில் அமைந்துள்ள மில்வீல்ட் தியேட்டரில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களோடு சிறப்பாக நடாத்தியது.

நர்த்தன கலாலய அதிபரும் அதன் ஸ்தாபகருமான திருமதி. பத்மினி குணசீலனின் நெறியாள்கையில் 70க்கும் மேற்பட்ட அவரது மாணவிகள், அந்த மாணவிகளின் மாணவிகள் என அரங்கம் நிறைந்த நிகழ்ச்சிகள், பார்வையாளர்களை குதூகலத்திலும் வியப்பிலும் ஆழ்த்தியது.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து கர்நாடக இசையிலும் சிறந்தவரான சங்கீத வித்துவான் திருமதி. பத்மினியின் மாணவர்களின் இசைக்கச்சேரியுடன் ஆரம்பமானது. கச்சேரி விறுவிறுப்பாக நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆசிரியரின் மாணவிகளும் தற்போது ஆசிரியர்களாகத் திகழும், சாரங்கா குணசீலன், அனுஷா சஜீவ், நிரூஜா குணரூபன், பானுமஞ்சரி கந்தஞானி, ஆகியோரின் மாணவிகளின் நடனங்கள் சிறப்பாக இளஞ்சிட்டுக்களின் வர்ண ஜாலங்கள்போல் கவர்ச்சிகரமாக இருந்தன.

முருகன் பாடல்களுக்கு சாரங்காவின் மாணவிகளின் நிகழ்ச்சி தொடர்ந்து நடனங்களில் நவரச பாவனைகள், விறுவிறுப்பான தில்லானா நடன நிகழ்ச்சிகள் கண்களுக்கு விருந்தாக அமைந்ததுடன் மேலைத்தேய நடனங்களுக்கு இணையாக சில இடங்களில் அவற்றையும் விஞ்சி அமைந்ததாக அவையோர் கருத்துப் பரிமாறியதை அவதானிக்கக்கூடியமாக இருந்தது.

இடைவேளையைத் தொடர்ந்து அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் புலவர் சிவநாதனின் எழுத்தாற்றலில் திரு. இராமகிருஷ்ணன் அவர்களின் சிறந்த இராக அமைப்புக்களுடன், 58 நிமிடங்கள் தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற நாட்டிய நாடகம் இடம்பெற்றது. எந்தவித இடைவெளியும் இன்றி நடனத்தாரகைள் மேடையின் இருபக்கங்களிலும் இருந்தும் சாரிசாரியாக தொடர்ச்சியாக நடனமாடி மகிழ்வித்தனர். மேடைத்திரையில் அழகழகாக அந்தந்த காட்சிகளின் வர்ணனைகள் கதைபேசிக்கொண்டு இருந்தன. கிருஷ்ணரின் அனைத்து அவதாரங்களும் இரத்தினச் சுருக்கமாக மேடையின் நடனமாக வெளிவந்தவண்ணம் இருந்தன. நடனமாடிக்கொண்டிருந்த அதே மாணவிகள் வெவ்வேறு பாத்திரங்களில் நடனமாடியமை பார்வையாளர்களுக்கு விந்தையாகவும் பரவசமாகவும் அமைந்திருந்தன.

அதற்கும் மேலாக் குரு பத்மினி குணசீலன் மேடையேறி நடனமாடி மண்டபம் நிறைந்த கரகோசங்களைப்பெற்று மகிழ்வித்ததோடு தனது மாணவர்களுக்கும் ஆச்சரியத்தையும் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

திருமதி. பத்மினி குணசீலன் அவர்கள் இந்தியாவில் நடனத்தைப்பயின்று இலங்கையில் 10 வருடங்கள் பல மாணவர்களுக்கு பயிற்றுவித்து 85ம் ஆண்டு முதல் இன்று வரை லண்டன் மாநகரில் விதைத்த விளைச்சலின் அறுவடையை அமோகமாகப் பெற்றுள்ளார் எனபது கண்கூடு. வாழ்க நர்த்தன கலாலயம். வாழ்க திருமதி பத்மினி குணசீலனும் அவர்தம் மாணவிகளும். நன்றி.

**தகவல்: கவிஞர் பாலரவி**

















# இலங்கையில் வேதம் ஓதும் சாத்தான்கள்

**"இலங்கையில் பேரினவாதத்தைத் தோற்றுவித்து இனப்படுகொலைகளையும் மத வன்முறைகளையும் செய்த பெருந்தேசியக் கட்சிகள் எவையும் தமது கட்சிப் பெயரில் இனத்தையோ, மதத்தையோ கொண்டிருந்ததில்லை. இன, மத அடையாளங்களுடன் இருக்கும் கட்சிகளையும் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களையும் இன, மத அடையாளங்கள் இல்லாத இந்த அரசியல் கட்சிகளின் ஆட்சியாளர்கள் இன, மத ரீதியாக அடக்கி, ஒடுக்கி, அழித்து வருவதே இலங்கையின் வரலாறு."**

**-------------------------------------------------------------- கே.பாலா ---**

இலங்கையில் இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்குவதை, இயங்குவதனை தடை செய்ய வேண்டுமென்பதில் பேரினவாதிகள் விடாப்பிடியாகவுள்ளனர். 2009 இல் மஹிந்த ராஜபக்ச அரசு கொண்டு வரவிருந்த சட்டமூலம், 2015 ஆம் ஆண்டு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவின் முன் மொழிவு, அதே ஆண்டு வழக்கறிஞர் பிரசன்னா லால் டி அல்விஸ் தாக்கல் செய்த வழக்கு, 2020 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு தொடர்பான கண்காணிப்பு குழுவின் கோரிக்கை என்ற வரிசையில் கடந்த 10 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் தற்போதைய தேசியப் பட்டியல் எம்.பி.யுமான ரவி கருணாநாயக்க கொண்டுவந்த தனிநபர் பிரேரணை வரை இலங்கையில் இன, மத அடிப்படையிலான அரசியல் கட்சிகளை தடை செய்யும் சூழ்ச்சி தொடர்கின்றது.

இலங்கையில் இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்குவதை, இயங்குவதனை தடை செய்யும் வகையில் ஏற்கனவே பேரினவாத அரசுகளும் அமைப்புகளும் தனிநபர்களும் கொண்டுவந்த சட்டமூலங்கள், பிரேரணைகள். முன்மொழிவுகள், வழக்குகளை நீதிமன்றங்கள் நிராகரித்து தள்ளுபடி செய்த நிலையில் தற்போது ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் தற்போதைய தேசியப் பட்டியல் எம்.பி.யும் கொழும்பு மாவட்டத்தில் தேர்தல்களில் போட்டியிடும்போது தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளை பெறுபவருமான ரவி கருணாநாயக்க முன்வைத்த தனிநபர் பிரேரணை தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து அப் பிரேரணையை ஒழுங்குப்பத்திரத்தில் இருந்து சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நீக்க வைத்துள்ளன.

இலங்கையில் இன, மத ரீதியிலான அரசியல் கட்சிகள், அமைச்சுக்கள், பாடசாலைகள், அனைத்தும் தடை செய்யப்பட வேண்டுமென்ற இனவாதக் குரல்கள் சிங்கள கடும்போக்குவாத அரசியல்வாதிகளிடமிருந்து "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற கோஷத்துடன் மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச அரசுகளில் தான் பலமாக ஒலித்திருந்தன. இலங்கையில் இன, மத ரீதியான தாக்குதல்கள் இடம்பெறுவதனாலும் இலங்கையர்கள் இனம், மதம், மொழி எனப் பிரிந்து கிடப்பதனாலும் இவை தடை செய்யப்பட வேண்டுமென்ற வாதம் இவர்களினால் முன் வைக்கப்பட்டது.

இலங்கையில் இன, மத பெயர்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும். பௌத்தம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என ஒவ்வொரு மதத்துக்கும் ஒவ்வொரு அமைச்சு தேவையில்லை. எல்லா மதங்களுக்கும் ஒரு அமைச்சர் இருந்தால் போதும், சிங்களப் பாடசாலை, தமிழ் பாடசாலை, இந்துப் பாடசாலை, முஸ்லிம் பாடசாலை, கிறிஸ்தவப் பாடசாலை என ஒவ்வொரு இனத்துக்கும் மதத்திற்கும் பாடசாலைகள் தனித்தனியே தேவையில்லை. அனைத்தையும் ஒன்றாக்க வேண்டுமென்பதே "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற போர்வையில் சிங்கள கடும்போக்குவாதிகளினால் மஹிந்த ராஜபக்ச, கோத்தபாய அரசுகளில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் அவர்களின் முயற்சிகள், சூழ்ச்சிகளுக்கு நீதிமன்றங்கள் அனுமதி வழங்க மறுத்ததினால் அதன்பின்னர் அந்த விடயம் அடங்கியிருந்த நிலையில்தான் தற்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் தற்போதைய தேசியப் பட்டியல் எம்.பி.யு மான ரவி கருணாநாயக்க இலங்கையில் இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்குவதை தடைசெய்ய வேண்டும். தற்போது மதம், இனத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் அரசியல் கட்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற தனி நபர் பிரேரணையை கொண்டுவந்து சிறுபான்மையினக் கட்சிகளான தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு ஒரு அச்சுறுத்தல் நிலையை மீண்டும் ஏற்படுத்த முயன்றுள்ளார். எனினும் இந்த முயற்சிக்கு உடனடியாகவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒன்றை உதாரணமாக வைத்து தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தற்காலிகத் தடைபோட்டுள்ளனர்.

இன, மத, மொழி, சமூக அடையாளங்களோடு அரசியல் கட்சிகள் இயங்குவதைத் தடை செய்ய மஜிந்த ராஜபக்ச அரசில் சட்டம் மூலம் ஒன்று 2009 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்ட போது எதிர்கட்சியிலிருந்த மங்கள சமரவீர ஒரு வழக்கையும் தமிழரசுக்கட்சியின் செயலாளராக விருந்த மாவை சேனாதிராஜாவும் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்து ஒரு வழக்கையும் இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிலையில் அப்போதைய சட்டமா அதிபர் தேர்தல் திருத்தச் சட்டத்தில் மேற்படி மத, மொழி, சமூக பெயர் அடையாளங்களோடு அரசியல் கட்சிகள் இயங்கக் கூடாது என்ற விடயம் சட்ட மூலத்திலிருந்து விலக்கப்படும்என உயர் நீதிமன்றுக்கு வாக்குறுதி வழங்கினார். இவ்வாறு மஹிந்த ராஜபக்ச அரசு விலக்கிக்கொண்ட விவகாரத்தை மீண்டும் சட்டமாக்கவே ரவி கருணாநாயக்க முயற்சித்த நிலையில் அந்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை வைத்தே தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அதனை தாற்காலிகமாகத் தடுத்துள்ளனர்.

பிரித்தானிய ஆட்சியுடன் ஆரம்பிக்கும் இலங்கையின் அரசியற் கட்சிச் செயற்பாடுகள் சுதந்திரத்தின் பின்னர் இன, மத ரீதியான காரணங்களுடன் முனைப்புப் பெற்றன. இலங்கையின் பிரதான கட்சிகளும் சிங்கள தேசியவாத கட்சிகளும் பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயற்படுகின்றன. தேரவாத பௌத்த தலைமைகள் மதத்தலைவர்களாக மட்டுமல்லாது பெரும்பான்மை இன அரசியற் கட்சிகளை வழிநடத்தும் சக்தியாகவும் இயங்கி வருகின்றனர். அதேபோல் சிறுபான்மையினக் கட்சிகள் தமது இன, மத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இன, மதத்தினை தமது கட்சியின் கொள்கைகளில் உள்வாங்குகின்றனர்.


இலங்கையின் தேர்தல் செயலகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கடசிகளில் 15க்கு மேற்பட்ட கட்சிகள் தமிழ், முஸ்லிம், மலையக இன, மத அடையாளங்களுடனும் மூன்று வரையான கட்சிகள் சிங்கள இன அடையாளங்களுடனும் உள்ளன. குறிப்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், இலங்கை தமிழ் அரசு கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகள் தமிழின அடையாளத்துடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் முஸ்லிம் இன அடையாளத்துடனும் உள்ளன. இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணி ,மலையக மக்கள் முன்னணி என்பவை பங்காளிக் கட்சிகளாகவும் உள்ளன. சிங்களக்கட்சிகளிலும் இன, மத அடையாளங்கள் கொண்ட கட்சிகள் உள்ளன.

இவ்வாறு இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றதிலும் வளர்ச்சியிலும் இனம். மதம் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இது இலங்கையில் இன,மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணியாகவும் மாறியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் ஆட்சி அதிகாரத்தினைத் பெற்றுக் கொள்வதோடு அதனை தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டான அரசியல் ஆதாயத்திற்கு இன, மத அடையாளங்கள் அரசியற் கட்சிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட்டால் தமிழ், முஸ்லிம், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மையினக் கட்சிகள்தான் பாதிக்கப்படும். அதேவேளை இன, மத அடையாளங்களுடன் இயங்கும் இந்த சிறுபான்மையினக் கட்சிகள் இந்த இன,மத அடையாளங்களுடன் இல்லாத அரசியல் கட்சிகள் செய்யாத எதனை செய்து விட்டன என்பதற்காக தடை செய்யப்பட வேண்டும் என்ற கேள்வியும் பலமாக எழுகின்றது.

இன அடையாளம் இருந்தால் இனவாதம் பேசுவார்கள், மத அடையாளம் இருந்தால் மதவாதம் பேசுவார்கள் என்றால் இவ்வாறு இன அடையாளம் இல்லாத கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 1983 ஜூலை 23 ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரம் செய்யவில்லையா? அதனைத்தொடர்ந்து பல வருடங்களாக இனப்படுகொலைகள் செய்யவில்லையா? ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு என்ற பெயரைக்கொண்ட கட்சிகள் நடத்திய யுத்தத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படவில்லையா?

ஏன் தற்போது ஆட்சிபீடத்தில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரைக்கொண்ட கட்சி (ஜே.வி.பி.) அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடவில்லையா? தம்மினத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்களை படுகொலை செய்யவில்லையா? அல்லது இந்தக்கட்சிகள் இனவாதம், மதவாதம்தான் பேசவில்லையா? தேசிய சுதந்திர முன்னணி என்ற கட்சியின் கொள்கையே இனவாதம்தானே? எனவே இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் இயங்கும் அரசியல் கட்சிகள் தடை செய்யப்படவேண்டுமென்பதும் ஒரு இன, மதவாதம்தான் என்பதே தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் கருத்து.




எனவே இலங்கையில் அரசியல் கட்சிகளின் பெயர்களில் உள்ள இன, மத அடையாளங்களுக்கும் அவற்றின் செயற்பாடுகளுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. இன, மத அடையாளங்களுடன் இருக்கும் கட்சிகளையும் அவை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களையும் இன, மத அடையாளங்கள் இல்லாத அரசியல் கட்சிகளின் ஆட்சியாளர்கள் இன, மத ரீதியாக அடக்கி, ஒடுக்கி, அழித்து வருவதே இலங்கையின் வரலாறாக உள்ளதால் இலங்கையில் இன, மத ரீதியிலான அரசியல் கட்சிகள் தடை செய்யப்பட வேண்டுமென்ற குரல்களும் இன, மத ரீதியிலானவையே.

(தொடர்ச்சி 18 பக்கம்)



# தமிழர் பண்பாட்டின் பெருமை "பறை"மேள இசை

"பறை" பற்றி பலரும் பேசும் காலம் இது. தமிழ் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றாகப் பறை மேள இசை சிறப்பு இடம் வகிக்கிறது. பழங்காலம் தொட்டே தமிழர் வாழ்க்கையில் பறை முக்கிய பங்கு வகித்துள்ளது. பழங்காலத் தமிழர் வாழ்வியலில் செய்தியூடகம் என்று ஒன்று இல்லாத காலகட்டத்தில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை, அறிவித்தல்களை, அரசக் கட்டளைகளை ஊர் ஊராகச் சென்று சொல்லுதல் பறைதல் என்றும், அவ்வாறு ஊர் ஊராகச் சென்று சொல்பவர் பறையர் என்பதும் காரணப்பெயர்களாகும்.

பறை மேள இசை ஒரு காலத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கலை எனக் கருதப்பட்டாலும் இன்று அது தமிழர் அடையாளத்தின் பெருமையாக மாறியுள்ளது. சமூக நீதி இயக்கங்களிலும், கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் பறை ஒலிக்கும் போது அது ஒரு உரிமை ஒலியாக மக்களிடம் சென்று சேர்கிறது. பறையின் ஒலி ஆற்றல், வீரியம், ஒற்றுமை, எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு குரல்.

பல சமூக அமைப்புகள் தற்போது பறை மேள இசைக்கலையை ஊக்குவித்து வருகின்றன. அந்த வகையில் பறைமேள மற்றும் சொர்ணாளி கலைஞர்களை கௌரவித்து அக்கலைகளை ஊக்குவிக்கும் விதமாக 2025.10.11 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில், மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின் ஓர் அங்கமாகிய முரசம் பேரிசை கலைகள் கற்கை மன்றத்தின் ஏற்பாட்டில் பறை, சொர்ணாளி ஆற்றுகை நிகழ்வு நடைபெற்றது. அதில் களுதாவளையைச் சேர்ந்த பறை மேளக் கலைஞரான ச. திவ்ய புத்திரனும் சொர்ணாளி கலைஞரான ச. விஜய புத்திரனும் மற்றும் பறை இசைக் கலை வளர்ச்சிக்கு ஆதரவாக இயங்கும் தேனூ ரான் அண்ணாவியாரும் கௌரவிக்கப் பட்டதோடு பறை மற்றும் சொர்ணாளி என்பன இசைக்கப்பட்டு நிகழ்வில் பங்கு பற்றியவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மதிய விருந்துபசாரத்துடன் நிகழ்வு இறுதிக்கட்டம் அடைந்து முரசறைதல் சார்ந்த கருத்துப்பரிமாற்றத்துடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது. இதன் மூலம் பழமையான ஒரு கலை வடிவம் புதிய தலைமுறையிலும் நிலைத்திருக்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பறை மேள இசை வெறும் இசை அல்ல: அது ஒரு சமூக வரலாறு, எதிர்ப்பு, பெருமை,மற்றும் பண்பாட்டு அடையாளம். அதன் ஒலியில் ஒற்றுமையும், உயிரோட்டமும் உறைந்துள்ளன. பறை மேள இசை என்பது காலத்தால் அழியாத தமிழர் பாரம்பரிய கலை. அது வெறும் ஒரு கலை வடிவமல்ல அது ஒரு அடையாளம், ஒரு குரல், ஒரு எதிர்ப்பு. இந்த மரபை நாம் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொருவரிடமும் உள்ளது. பறையின் ஒலி என்றும் ஒலித்துக்கொண்டே தமிழ் பண்பாட்டை உயிர்ப்புடன் கொண்டுசெல்லட்டும்.

**லவக்குமார் லாவணியா.**
**நுண்கலைத்துறை மாணவி**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**




*(17 பக்கத் தொடர்ச்சி)*

## *இலங்கையில் வேதம் ஓதும் சாத்தான்கள்*

இலங்கையில் பேரினவாதத்தைத் தோற்றுவித்த பெருந்தேசியக் கட்சிகள் எவையும் தமது கட்சிப் பெயரில் இனத்தையோ, மதத்தையோ கொண்டிருந்ததில்லை. பெருந்தேசியவாதத்துக்கும் பேரினவாதத்துக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்த சிறுபான்மையினக் கட்சிகளும், சில உதிரி பெருந்தேசியவாத, பேரினவாதக் கட்சிகளும்தான், தமது கட்சிப் பெயரில் இனம் அல்லது மதம் தொடர்பான பெயர்களைக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தடைமுயற்சி, சிறுபான்மையினக் கட்சிகளைக் குறிவைத்ததாகவே இருக்கிறது.

மனித வாழ்வின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக, எண் கணித சாஸ்த்திரத்தின்படி பெயரை மாற்றி அமைத்துவிட்டால், பிரச்சினை களுக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை போன்றதே இந்த இனம், மதம் தொடர்பான பெயர்களைக் கட்சிப் பெயர்களில் கொண்ட கட்சிகளைப் பதிவு செய்யாமல் விடுவதன் மூலம், இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையும். இந்தப் பெயர்த்தடை முயற்சி என்பது, எப்படி இருக்கிறதென்றால், உள்ளே எத்தகைய கொடும் தேசியவாத, இனவாதச் சிந்தனைகளும் இருக்கலாம். ஆனால், பெயர் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதாகவே இருக்கிறது.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் "றோமியோ அன்ட் ஜூலியட்"இல் ஓர் வரி வருகிறது. "What's in a name? that which we call a rose by any other name would smell as sweet" - "பெயரில் என்ன இருக்கிறது? நாம் ரோஜா என்று அழைப்பதை வேறு எந்தப் பெயர்கொண்டு அழைப்பினும் அது இனிய மணத்தையே கொண்டிருக்கும்" என்பதே அந்த வரி. எனவே, ஒரு பொருளின் பெயரை மாற்றுவது, அதன் தன்மைகளை மாற்றாது. இதனை நன்கு தெரிந்தும் சிங்கள பேரினவாதிகள் இலங்கையில் இன, மத அடிப்படையில் அரசியல் கட்சிகளை உருவாக்குவதை, இயங்குவதனை தடை செய்ய வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நிற்பதுதான் அப்பட்டமான இன, மதவாதம்.

# மூத்தோரைத் துதி செய்வோம்

**சர்வதேச முதியோர் தினம். ஒக்டோபர் 01**



*மூத்தோர் என்பவர் யார்?*
*மூலையில் முடக்கப்பட வேண்டியவர்களா?*
*மூத்தோர் இல்லத்தில் அடைக்கப்பட வேண்டியவர்களா?*
*முதுமை என்பது வாழ்வின் முடிவல்ல*
*முதுவேனியில் வரும் முழுமதியின் தொடக்கம்*
*முற்றும் துறந்த முனிவரல்ல முதியோர்*
*முற்றிப் பழுத்த முக்கனி அவர்கள்*
*இளைஞர்களே எண்ணிப் பாருங்கள்*
*உங்கள் இறந்த காலத்தையும்*
*ஏறிவந்த ஏணியையும் ஒருமுறை திரும்பிப் பாருங்கள்*
*உங்கள் ஏற்றம்தரு வாழ்வுக்கு ஏதுவாய் இருந்தவரை*
*ஏதிலிகளாக்கி எமனுக்கு இரையாக்காதீர்*
*"காவோலைவிழக் குருத்தோலை சிரித்தகதை தெரியுமா?"*
*காலம் ஒருநாள் உம்மையும் காவோலை ஆக்கும்*
*மூத்தோர் விடும் கண்ணீர்*
*உம்மைச் செந்நீர் விடவைக்கும்*
*கங்கையில் மூழ்கிக் குளித்தாலும் கரையாது உம்பாவம்*
*முதுமையை அடைந்திட்ட பெற்றோரை*
*இணையராய் ஒன்றாக வாழவிடுங்கள்*
*அந்தப் அகவையில்தான் வயதிற்தான் அவசியமாய்த் துணைதேவை*
*பாசமாய் வாழ வழிசெய்து கொடுங்கள்*
*பாகப் பிரிவினை செய்து பங்கு போடாதீர்கள்*
*பாரபட்சம் காட்டாமல் பக்குவமாய்ப் பாருங்கள்*
*பழிச்சொல்லுக் கேட்காமல் பண்பாக நடவுங்கள்*
*"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"*
*நாளை நீரும் மூத்தோர் ஆவீர்*
*நன்றாய் மூத்தோர் நலம் காத்து*
*நானிலம் வாழ்த்த வாழ்ந்திடுவீர்.*

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
*(416) 844-7453*





## கண்ணீர் அஞ்சலி #77

### திரு. விக்னேஸ்வரன் ஆனந்தர்



மலர்வு: 24-06-1947    உதிர்வு: 28-09-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #219

28-09-2025 அன்று இறைவனடி சேர்ந்தர். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
ostba2019@gmail.com    ww.ostb5.ca
416-473-6880

## கண்ணீர் அஞ்சலி #78

### திருமதி. லீலா சந்திரசேகரம்



மலர்வு: 24-08-1933    உதிர்வு: 06-10-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #33

06-10-2025 அன்று இறைவனடி சேர்ந்தர். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
ostba2019@gmail.com    ww.ostb5.ca
416-473-6880

# இவ்வார ராசிபலன்

**24-10-2025 வெள்ளி தொடக்கம் 30-10-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**மேஷம்:** பொறுப்போடும், சிறப்போடும் செயல்படும் வாரம். சோதனைகள் நீங்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகளும் வந்து போகும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி கூடும். தனவரவுகள் பெருகும். முயற்சிகள் பலிதமாகும். செயல்களில் துணிவு கூடும். தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்லச் செய்திகள் நாடி வரும். வினைகள் அகலும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். பெற்றோர்கள் பாராட்டுக் கிட்டும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குடும்ப குழப்பம் அகலும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேரும். மங்களகரமான செய்தி வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். புகழ் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். கடன் சுமைகள் குறையும். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். வாகன மாற்றம் ஏற்படும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல் அதிகரிக்கும். திருப்திகள் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். அனுகூலச் செய்தி வந்து சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொழில் லாபம் உண்டு. ஆண்களின் அதிகாரம் உண்டு. சாதகமான வாய்ப்பு அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,P




**ரிஷபம்:** உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும் வாரம். சாதனையான எண்ணம் உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பொருள் வரவு ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். மனைவியால் நன்மை உண்டு. மற்றவர்களால் தொல்லை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். வாகன மாற்றம் உண்டு. கொடுக்கல், வாங்கலால் திருப்தி தரும். சகோதர ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியம் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். சாதனை படைக்கும் காலம். சுப விரயம் கூடும். உடல்பொலிவு கூடும். தான தர்மங்கள் பலன் தரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வந்து சேரும். உண்மைகள் வெளிப்படும். உயர்வுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மனநிம்மதி குறையும். பணியில் பாராட்டு கிடைக்கும். குடும்ப மேன்மை உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். புதிய சிந்தனை மேலோங்கும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். நலம் வகையான நன்மையும் பெருகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடம் மாற்றம் ஏற்படும். பெருமைகள் கூடும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். யோக பலம் கூடும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு உயரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். வறுமைகள் விலகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. விரக்திகள் மறையும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். புத்தி சாதுர்யம் பெருகும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். உடல்பொலிவு கூடும். கல்வியில் கவனம் தேவை. திட்டமிட்ட செயல் வெற்றிமுகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் திருப்தி தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொருளாதாரம் மேம்படும். குடும்ப வளர்ச்சி கூடும். அணிமணிகள் சேரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு லாபம் தரும். சகோதரியினால் நன்மை உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. விரும்பிய பொருள் கிடைக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பொதுவி'யங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1

அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,S




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். இடமாற்றம் நன்மைத் தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சி பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி பெருகும். மருத்துவச் செலவுகள் குறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லத்தில் மகிழ்ச்சி துள்ளி விளையாடும். புதிய நட்பில் கவனம் தேவை. இடமாற்றத்தால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைத்தூரப் பயணம் ஏற்படும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனோ பயம் அகலும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். முத்தான வாய்ப்புக்கள் வரும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். பிள்ளைகளின் கல்விச்செலவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். பிள்ளைகளின் கல்விச் சலுகைகள் அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. சுபவிரயம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: லஷ்மி குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,1,2

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,A




**சிம்மம்:** திருப்பங்கள் நிறைந்த வாரம். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். பணியில் பாராட்டு கிட்டும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். எதிர்கால எண்ணம் ஏற்றம் தரும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். சுபிட்ஷங்கள் பெருகும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிட்டும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச்சொத்து சேரும். செயல் திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். புண்ணிய ஸ்தலப் பயணம் ஏற்படும். உடல் உபாதை தோன்றும். தொழில் வழித் தொல்லை குறையும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். வீண் வம்பு விலகும். குடும்ப சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். உணவுப்பிரியம் அதிகரிக்கும். பாராட்டுக்கள் பெருகும். பணவரவு தாமதமாகும். புதிய தொழில் வாய்ப்பு அமையும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தன்னம்பிக்கை கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 8,9,4,6

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T




**கன்னி:** எண்ணிய காரியம் கைகூடும் வாரம். சிறிய இடையூறு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்புக் கிட்டும். பகைவர் பணிந்து நிற்பர். மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மையுண்டு. வாழ்வில் வளம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலன் தரும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் லாபம் உண்டு. காதலில் மோதல் உண்டு. எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். வாகனச் செலவு ஏற்படும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. தொழிலில் நிம்மதி பெருகும். வழக்கு வெற்றி தரும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். தந்தையின் நலம் பெருகும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பொருள் வரவு திருப்தி தரும். பித்தளைத் தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர்கள் நட்பு கிட்டும். மன உற்சாகம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,H




**துலாம்:** சாதனைகள் நிகழ்த்தும் வாரம். புகழ்ச்சி அதிகரிக்கும். நோய், நொடிகள் அகலும். தங்க நகைகள் சேரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தொல்லைகள் ஒழியும். சுயநலம் கூடும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். முயற்சிகள் பலன் தரும். தெய்வீக ஈடுபாடு கூடும். வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். போட்டி, பொறாமைகள் விலகும். தொழில் விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். வேலைப்பளு கூடும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். வழிபாடு மாற்றம் தரும். கல்வியில் ஈடுபாடு கூடும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனை தீரும். வியாபாரம் சிறக்கும். குதூகலமான காலம். அற்புத வாய்ப்புக்கள் கிட்டும். பெண்களின் ஆலோசனை மாபெரும் வெற்றியை தரும். ஆடை, அணிகலன் சேரும். சுபகாரியம் கைகூடும். பங்குச்சந்தை லாபம் தரும். காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். பாதிப்புக்கள் அகலும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச்செய்தி வரும். மருத்துவச் செலவு உண்டு. மாற்று யோசனை பயன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். திருத்தமான முடிவு ஏற்படும். வியாபாரத்தில் தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். நண்பர்களால் நன்மையுண்டு. புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பெண்களால் ஆதாயம் ஏற்படும்.


வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,1,7,8

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,J

(தொடர்ச்சி 22 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1169

## (வரலாறும் மரபும்)

## பஉவதவஉத்தினி சமேத பசுபதீஸ்வரஉ திருக்கோயில்

### (பருத்தித்துறை சிவன் கோயில்)

### புலோலி, பருத்தித்துறை

*"பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங்கோயில் எழுபதினொ டெட்டு மற்றும்*
*கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்*
*கருப்பறில் பொருப்பனைய கொகுடிக் கோயில்*
*இருக்கொதி மறையவர்கள் வழிபட் டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே."*

திருக்கோயில்கள் நம் வாழ்வின் மையப்பொருளாகத் திகழ்கின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்தொழில்கள் புரியம் இறைவன், எங்கும் நிறைந்த பரம்பொருளாகக் காணப்படுகின்றான். இவ்வாறான பரம்பொருள் ஆங்காங்கே கோயில்கொண்டுள்ள மூர்த்திகளில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். ஊனுடம்பு ஆலயம் என்ற ரீதியில், ஆத்மார்த்தமாக இறைவனை உள்ளத்திருத்தி வழிபடுவோர் உள்ளத்திலும், ஆகமநெறிகளிலே கூறப்பட்டுள்ள மந்திரபூர்வமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்திகளிலும் உருக்கொண்டு, சகல உயிரினங்களுக்கும் இறைவன் அருள்புரியும் இடமாக திருக்கோயில்கள் காணப்படுகின்றன. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உடல் ஆரோக்கியம், மனஅமைதியும் மற்றும் அனைத்து அருட்கொடைகளையும் வழங்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு, மனித சமுதாயம் சமர்ப்பிக்கும் நன்றிக்கடனாக, கோயில்களும், வழிபாடும் அமைந்து காணப்படுகின்றது. கோயில்களைக் கட்டி, கும்பாபிஷேகம் நிகழ்த்தி, திருவிழாக்கள், வழிபாடுகளை நடத்தி மகிழ்கின்றோம். இந்த வழிபாட்டிலே நாம் உண்பதை முன்கூட்டியே இறைவனுக்கு நைவேத்தியம் செய்வதான மரபு காணப்படுகின்றது. அவ்வாறே நாம் அணியும் ஆடை ஆபரணங்கள்போல, ஆண்டவனுக்கும் அணிவிக்கின்றோம். இவையெல்லாம் எமது மனதிற்கு அமைதியையும், ஆறுதலையும் அளிப்பதற்காக முன்னோர்களால் வகுக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

வேதங்களும், இதிகாசங்களும், புராணங்களும் பல்வேறு பக்தி இலக்கியங்களும் மக்களை நல்வழிப்படுத்துகின்றன. ஈழத்திலுள்ள கோயில்களினால் மக்கள் மனஅமைதியையும், வாழ்க்கையின் நிதர்சனத்தையும் உணர்ந்து வாழ்ந்துகொள்ளும்நிலை காணப்படுகின்றது
கோயில் கட்டுமானங்கள், அமைப்பு முறைகளில் பல்வேறுவிதமான வேறுபாடுகள் காணப்படலாம். இறைவனின் திருவுருவங்களும், அமைப்புக்களும் பலவிதமாக அமைந்திருக்கலாம். ஆனால் வழிபடும்நோக்கமும், மனஒருமைப்பாடும் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாகவே போற்றப்படுகின்றது. ஆன்மீக எண்ணமே நாட்டுமக்களை நல்வழிப்படுத்தி, அன்பை நிலைநாட்டும் பெருஞ்சக்தியாக விளங்குகின்றது. இவற்றை உணர்த்தும் திருக்கோயில்கள் ஈழமெங்கும் பரந்து காணப்படுகின்றன.

பரம்பொருளாகிய சிவவழிபாடு ஈழத்தின் தொன்மை மிகுந்த வழிபாடாகக் காணப்படுகின்றது. இவற்றின் வெளிப்பாடாக வரலாற்றுக்கு முந்திய காலப்பகுதியில் அமைந்த பஞ்சஈஸ்வரங்கள் காணப்படுகின்றன. இவற்றோடு சிவாலயங்கள் பல ஈழமெங்கும் பரவிக் காணப்படுகின்றன. இவ்வாறான சிவன் கோயில்களுள் வடமராட்சி பருத்தித்துறை புலோலி கிழக்கில், பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் என அழைக்கப்படும், பருத்தித்துறை சிவன்கோயில் காணப்படுகின்றது. இக்கோயில் அமைந்துள்ள பிரதேசத்தின் பண்டைக்காலப் பெயர், வென்றிவாகுதேவர் குடியிருப்பு என வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாலயம் அமைந்துள்ள பருத்தித்துறைப் பிரதேசம், இலங்கையின் வடகரையில், துறைமுகமும் நகரும் இணைந்த இடமாகக் காணப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரிய நிலப்பரப்பாக புலோலி விளங்குகின்றது. அக்காலத்திலே புகழ்பெற்ற பல புலவர்களும், கற்றோரும் மற்றோரும் இங்கு வாழ்ந்த காரணத்தினால், புலவர் ஒலி ஸ்ரீ புலோலி என பெயர் ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இத்தகைய புகழ்பெற்ற பிரதேசத்திலே அமைந்துள்ள பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் தோற்றம், பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியைக் கொண்ட தொன்மையுடையதாக விளங்குகின்றது.

இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தின் பண்டைக்காலப் பெயரான வென்றிவாகுதேவன் குடியிருப்பு என்பது, வரலாற்றுப் பெயர்களோடு ஒத்துக் காணப்பட்டாலும் அதற்குரிய பெயர்க்காரணம் கூறப்படவில்லை. கட்டுப்பாடுகளற்ற அக்காலப்பகுதியில் தென்னாட்டிலிருந்து வர்த்தக நிமித்தமாகவும், யாத்திரை காரணமாகவும் ஈழத்தைநோக்கி மக்கள் வருகை தந்துள்ளனர். இவ்வாறு குடியேறியவர்களுள் செட்டிமார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஈழத்திலே சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றியபணி குறிப்பிடத்தக்கது. இப்பெருமக்களால் கட்டப்பட்டு நிருவகிக்கப்படும் பல கோயில்கள், இன்றும் ஈழமெங்கும் காணப்படுகின்றன. இத்தகைய கோயில்களுள் பருத்தித்துறை சிவன்கோயில் என வழக்கிலுள்ள பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் நிர்வாகம் புலோயில் வாழ்கின்ற செட்டிமார் பரம்பரையினராலேயே நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- வளரும்**



# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். ஆதாயம் பெருகும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். புதிய எண்ணங்கள் நிறைவேறும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய கடன் பாக்கிகளும் வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பெண்கள் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. மனதில் நினைத்த காரியம் நிறைவேறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்சனை நிறைவேறும். உறவினர் வகையில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். ஆண்களின் கோரிக்கை நிறைவேறும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. வாழ்வில் வளம் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் உண்டு. உலோகத் தொழில் உயர்வு பெறும். குடும்ப லஷ்மி கடாட்ஷம் பெருகும். இன்னல்கள் அகலும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. பழிச்சொல் தேடி வரும். கையிருப்புகள் கரையும். அந்தஸ்து உயரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். தேவைகள் அதிகரிக்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் ஏற்படும். நினைத்தபடி திருமணம் நடக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீராமர், அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,F




**தனுசு:** எதிரிகளால் ஏற்றம் அதிகரிக்கும் வாரம். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். காதல் எண்ணம் உருவாகும். புதிய பொருள் சேரும். பழைய நட்பினால் பலன் உண்டு. உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். வாய்ப்புக்கள் பெருகும். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் மிகுதியாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. பழையக்கடன் வசூலாகும். கல்வியில் மேன்மையுண்டு. சிக்கனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்களச் செய்திகள் வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். தந்தையின் உடல்நலம் சீராகும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பெண்களால் மதிப்பும், மரியாதையும் உயரும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,U




**மகரம்:** சாமர்த்தியமாக செயல்படும் வாரம். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். புதிய நட்பு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் கிடைக்கும். தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெண்களின் ஆலோசனைகளால்
ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பருப்பு தானம் பாவம் போக்கும். ஊக்கம் அதிகரிக்கும். வருமான வாய்ப்பு கூடி வரும். குதூகலம் சேரும். பழையக்கடன் தீரும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணங்கள் மேலோங்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். மகிழ்ச்சியான செய்திகள் வரும். வளமான வாழ்வு அமையும். உலோகத்தொழில் லாபம் தரும். தாய் உடல்நலனில் அக்கறை தேவை. நிதிப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். குடும்ப மேன்மை உண்டாகும். கர்ம வினைகள் அகலும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத்தொழிலில் லாபம் அதிகரிக்கும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும் வருமானம் கைகூடி வரும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். புதிய வாய்ப்பு வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அக்னி லிங்கப்பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 4,9,6,2, அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,P




**கும்பம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். பொன், பொருள் சேர்க்கையுண்டு. குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். மறைமுகமாக தொல்லை தருகிறவர்கள் விலகி செல்வர். வயிற்றுப்போக்கு வரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணவரவு உண்டு. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மனமகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனஅமைதி கிடைக்கும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் களை கட்டும். மனோ தைரியம் அதிகரிக்கும். சுப விரயம் கூடும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வு அமையும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். ஆலய தரிசனம் அமைதியைத் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். பெண்களால் மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். நட்புவட்டம் பெருகும். வராத கடன் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வாழ்வுநிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: கொண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,X




**மீனம்:** திறமைகள் அதிகரிக்கும் வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய் வழி உறவில் நன்மை உண்டாகும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பலன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும்.
சகோதர வழியில் சந்தோஷம் உண்டு. உறவினரால் நன்மையுண்டு. எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். பயணம் வெற்றி தரும். விரயங்கள் அதிகரிக்கும். சொத்துக்களால் லாபம் உண்டு. தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். திடீர் மாற்றம் நன்மை தரும். மங்கள நிகழ்ச்சிகளிலிருந்து பங்குப் பெறுவீர்கள். புதிய தொழில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விரோதங்கள் விலகும். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திரபகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I

## Scarborough Centre MPP David Sminth hosts 'Celebrate the 144 Skills Trades inh Ontario"

## ஸ்காபுறோ மத்தி மாகாணப் பாராளுமன்ற எம்பிபி டேவிற் ஸ்மித் ஏற்பாட்டில் "144 தொழிற் துறைகளைக் கொண்டாடுவோம்" என்னும் பயனுள்ள கருத்தரங்கு

ஸ்காபுறோ மத்தி மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் டேவிற் ஸ்மித் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் "144 தொழிற் துறைகளைக் கொண்டாடுவோம்" என்னும் பயனுள்ள கருத்தரங்கில் கலந்து கொண்டு இளையவர்களுக்கு பிரயோசனமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இதில் கலந்து கொள்ளுங்கள்.



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1542 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 24, 2025

# Historic investment in Durham Region for $3 billion partnership between the Federal and Ontario governments, to build Canada's first Small Modular Reactors

# டார்லிங்டன் நகரத்தில் கனடாவின் முதல் சிறிய அணுமின் நிலையத்தை அமைக்க கனடாவின் மத்திய மற்றும் ஒன்ராறியோ அரசாங்கங்கள் கூட்டாக முதலிட்டுள்ளன!



23-10-2025 வியாழக்கிழமை அன்று கனடிய , பிரதமர் மார்க் கார்னி மற்றும் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் ஆகியோர் டர்ஹாம் பிராந்தியத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முதலீட்டை அறிவித்தபோது, அவருடன் எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரான யுனிற்றா நாதன் அவர்களும் அழைக்கப்பெற்ற விருந்தினராகக் கலந்து கொண்டார் .: டார்லிங்டன் நகரத்தில் கனடாவின் முதல் சிறிய மட்டு அணுமின் உலைகளை உருவாக்க மத்திய மற்றும் ஒன்ராறியோ அரசாங்கங்கள் 3 பில்லியன் டாலர்கள் முதலீடு ஒன்றில் இணைந்துள்ளன இந்த திட்டம் தொடர்பாக தனது செய்திக்குறிப்பில் எழுதியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்கள் "இந்தத் திட்டத்தின் பிரகாரம் 18,000 கட்டுமான தொழில் வாய்ப்பு மற்றும் 3,700 நிரந்தர தொழில்களைத் தரவல்ல பலன் கிடைக்கும் அத்துடன் ஒன்றாறியோவின் சுத்தமான எரிசக்தித் திட்டத்தையும் வலுப்படுத்தும், மேலும் இந்த அடுத்த தலைமுறை அணு தொழில்நுட்பத்தை உருவாக்கும் முதல் G7 நாடாக கனடாவை மாற்றும். புதுமை நமது எரிசக்தி எதிர்காலத்தை இயக்குவதன் மூலம், டர்ஹாம் வலுவான, தூய்மையான மற்றும் நிலையான கனடாவை உருவாக்குவதில் தொடர்ந்து முன்னணியில் உள்ளது" என்றார்.

## Halloween Family Event beautifully hosted by 'Rekha Entertainment Network' in Brampton

# ரோறன்ரோவில் இயங்கிவரும் "றேகா பொழுது போக்கு அமைப்பினர்" நடத்திய ஹலோவீன் குடும்ப நிகழ்வு

ரொறன்ரோ பிராந்தியத்தில் நீண்டகாலமாக ஒளி ஊடகம் மற்றும் பொழுது போக்கு நிகழ்வுகளை ஊக்குவிக்கும் வகையில் இயங்கிவரும் "றேகா பொழுது போக்கு அமைப்பினர்" நடத்திய இவ்வருடத்திற்குரிய "ஹலோவீன் குடும்ப நிகழ்வு" கடந்த 18ம் திகதி சனிக்கிழமையன்று பிரம்ரன் நகரத்தில் உள்ள **Century Gardens Recreation Centre** விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. **Rekha Entertainment Network'** அமைப்பின் தலைவி திருமதி றேகா சுகுமார் மற்றும் அவரது புதல்வர் நித்தேஸ் ரொஹான் ஆகியோர் தங்கள் குழுவினருடன் இணைந்து மேற்படி நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.











நிகழ்வி பிரதம விருந்தினராக உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அழைக்கப்பெற்றிருந்தார். அவர் தனத உரையில்
சிறுவர் சிறுமியர்களோடு குடும்பத்தினரை இணைத்து
"ஹலோவீன் குடும்ப நிகழ்வில் ஏற்பாட்டாளர்கள் குதூகலத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று பாராட்டினார்.

இங்கே காணப்படும் படங்களில் பங்குபற்றிய சிறார்களுக்கு பரிசுகள் வழங்கப்பெறுவதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் திருமதி றேகா மற்றும் திருமதி லோகேந்திரலிங்கம் ஆகியோர் மேடையில் கௌரவங்களை செய்வதையும் காணலாம்.





# " எழுத்தாளர் அகில்" அவர்கள், தமிழக மற்றும் தாயக எழுத்தாளர்களையும் இலக்கியத் திறனாய்வாளர்களையும் புலம்பெயர் படைப்பாளிகளோடு இணைக்கும் பணியினை ஆற்றிவருகின்றார்"

## "இலக்கியவெளி" சஞ்சிகையின் நீலாவணன் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவில் அவருக்குப் புகழாரம்!

"கனடாவில் வாழ்ந்தாலும் தினமும் உலகெங்கும் உள்ள படைப்பாளிகளுடன் உரையாடுவது, அவர்களின் படைப்புக்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பது, அந்த படைப்பாளிகளை இணையவழி கருத்தரங்குகளின் மூலம் உலகெங்கும் உள்ள எழுத்தாளர்களோடு இணைத்துக் கொள்ளல் போன்ற தனது இயல்பான இலக்கியப் பணிகள் மூலம் அகிலேஸ்வரன் சாம்பசிவம் என்னும் எழுத்தாளர் "அகில்" அவர்கள், தமிழக மற்றும் தாயக எழுத்தாளர்களையும் இலக்கியத் திறனாய்வாளர்களையும் புலம்பெயர் படைப்பாளிகளோடு இணைக்கும் பணியினை இதயசுத்தியுடன் ஆற்றிவருகின்றார்"
(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker